வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

ஈழநாடு

Eelanadu

ඊළනාඩු


மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 02.08.2022 செவ்வாய்க்கிழமை | இதழ் : 238 | பக்கங்கள் : 16

### காலிமுகத்திடல் கடற்கரையில்

# மூன்றாவது சடலமும் ஒதுங்கியது நாடு முழுவதும் அச்சம் பரவுகிறது

கொழும்பு, ஓகஸ்ட் 02

பெரும் மக்கள் போராட்டம் இடம்பெற்ற காலிமுகத்திடல் கடற்கரையில் நேற்றும் ஒரு சடலம் கரையொதுங்கியுள்ளது. கடந்த ஒரு வாரத்தில் ஒதுங்கிய மூன்றாவது இளம் நபரின் சடலம் இதுவாகும். இவ்வாறு இளைஞர்களின் சடலம் அடிக்கடி கரையொதுங்குவது தலைநகரில் மட்டுமின்றி நாடு முழுவதும் அச்சம் நிறைந்த ஒரு சூழல் உருவாகி வருகின்றது.

16

## ரட்டா கைது!

கொழும்பு, ஓக. 02

கோட்டா கோ கம போராட்டக்களத்தின் முக்கியச் செயற்பாட்டாளரான சமூக செயற்பாட்டாளர் 'ரட்டா' எனப்படும் ரதிந்து சேனாரத்ன கைது செய்யப்பட்டார்.

நீதிமன்ற தடை

16



## நல்லூரானுக்கு இன்று கொடி!

யாழ்ப்பாணம், ஓக. 02

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 25 தினங்கள் இடம்பெறும் இந்தத் திருவிழாவில் எதிர்வரும் 11ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 4.45 மணிக்கு மஞ்சத் திருவிழாவும், 18ஆம் நாளான எதிர்வரும் 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4.45 மணிக்கு கார்த்திகைத் திருவிழாவும், மறுநாள் சனிக்கிழமை காலை 6.45 மணிக்கு சூர்யோற்சவமும் இடம்பெறவுள்ளன.

16



## நுவரெலியாவில் கடும் மழை; ஒருவர் மரணம்; இருவர் மாயம்!

நுவரெலியா, ஓக. 02

நுவரெலியா மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு முதல் தொடர்ச்சியாகப் பெய்யும் கடும் மழையால் ஒருவர் உயிரிழந்தார். இருவர் காணாமல் போயுள்ளனர்.

கடும் மழையால், நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் உயர்வடைந்துள்ளது. அத்துடன், நுவரெலியாவிலிருந்து பிற பகுதிகளுக்கான ரயில் சேவைகள், பொதுப் போக்குவரத்துக்கள் என்பன பாதிக்கப்பட்டுள்ளன.

களனி ஆற்றில் பெருக்கெடுத்த நீரால் கினிகத்தேனையில் 60 வயது பாட்டியும் அவரின் 5 வயது பேர்த்தியும் நீரில் அடித்துச் செல்லப்பட்டனர். இதில், பாட்டி மட்டும் சடலமாக மீட்கப்பட்டார். பேர்த்தியை தேடும் பணிகள் நேற்றிரவு வரை தொடர்ந்தது. எனினும், அவர் மீட்கப்படவில்லை.

இதேவேளை, கினிகத்தேனை விதுலிபுர டெப்லோ

16

## கோட்டாபயவுக்கு முழு வசதி பாதுகாப்பு வழங்க வேண்டும்

### பொதுஜனபெரமுன வலியுறுத்து

கொழும்பு, ஓக. 02

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மீண்டும் இலங்கைக்கு வந்து அரசியலில் ஈடுபட விரும்பினால் அதற்கு வரவேற்பு தெரிவிப்பதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் இதனைத் தெரிவித்தார்.

எப்போது வேண்டுமானாலும் இலங்கைக்கு

16

## 22 ஆவது திருத்தத்துக்கு அமைச்சரவை அனுமதி



கொழும்பு, ஓக. 02

உத்தேச 22 ஆவது அரசியலமைப்பு திருத்த சட்ட மூலத்துக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ இந்த விடயத் தைக் குறிப்பிட்டார். நேற்று இடம்பெற்ற அமைச்ச ரவைக் கூட்டத்தின்போதே, இதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

ஜனாதிபதிக்கான அதிகாரங்களைக் குறைத்து, பாராளுமன்றத்திற்கு அதிக பலத்தை வழங்கும் வகையில் குறித்த அரசமைப்பு சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது. (அ)

## ஓட்டோ டீசல் மட்டும் விலை குறைந்தது!

கொழும்பு, ஓக. 02

ஓட்டோ டீசல் ஒரு லீற்றருக்கு 10 ரூபாயால் விலை குறைக்கப்பட்டுள்ளது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐ. ஓ. சி. நிறுவனம் என்பன நேற்றிரவு 10 மணி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இந்த விலை குறைப்பை செய்துள்ளன.

இதன்படி, ஒரு லீற்றர் ஓட்டோ டீசல் புதிய விலை 430 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பெற்றோல் உள்ளிட்ட ஏனைய எரிபொருட்களின் விலைகளும் குறைக்கப்படும் சாத்தியமுள்ளது என்று நேற்றிரவு எரிசக்தி அமைச்சர் அறிவித்த போதிலும் இந்த செய்தி எழுதப்படும்வரை விலை குறைப்பு இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கொரோனாவுக்கு மேலும் மூவர் பலி!

கொழும்பு, ஓக. 02

நாட்டில் மேலும் 03 கொவிட் இறப்புக்கள் பதிவாகியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் நேற்று முன்தினம் இந்த இறப்புக்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோய் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில்

16

## சிறுபான்மையினரை இலக்கு வைத்ததன் விளைவையே இலங்கை அனுபவிக்கிறது

### இந்திய ரிசேர்வ் வங்கி முன்னாள் ஆளுநர்

புதுடில்லி, ஓக. 02

அரசியல்வாதிகள் வேலைவாய்ப்பை தங்களால் உருவாக்க முடியாத போது அதனை மறைப்பதற்காக சிறுபான்மை இனத்தவர்களை தாக்குவதால் ஏற்பட்ட விளைவுகளை இலங்கை அனுபவிக்கின்றது

- இவ்வாறு இந்திய ரிசேர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநர் ரகுராம் ராஜன் தெரிவித்துள்ளார்.

லிபரல் ஜனநாயகத்தையும் அதன் கட்டமைப்புகளையும் வலுப்படுத்துவதிலேயே இந்தியாவின் எதிர்காலம் தங்கியுள்ளது. பொருளாதார வளர்ச்சிக்கு இது மிகவும் அவசியமானது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பெரும்பான்மைவாதம் குறித்து எச்சரித்துள்ள அவர் வேலைவாய்ப்பு நெருக்கடியிலிருந்து கவனத்தை திசை திருப்புவதற்காக அரசியல்வாதிகள் சிறுபான்மை இனத்தவர்களை தாக்குவதால் என்ன நடக்கும் என்பதற்கு இலங்கை உதாரணம். மேலும், சிறுபான்மை இனத்தவர்களை

16

## சர்வகட்சி அரசுக்கு முன்பாக நிபந்தனை பேச்சு அவசியம்!

### ஜனாதிபதிக்கு சம்பிக்க கடிதம்

கொழும்பு, ஓக. 02

"சர்வ கட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கு முன்பாக அதற்கான நிபந்தனைகள் தொடர்பாகப் பேச்சு நடத்துவது அவசியம்", என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை வலியுறுத்தியுள்ளார் சம்பிக்க ரணவக்க எம். பி.

இது தொடர்பில் அவர் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில்,

"ஏற்கனவே நீங்கள் நியமித்துள்ள அமைச்சரவையை இரத்து செய்யுங்கள், ஊழலில் ஈடுபட்டவர்களும் இந்த நியமனங்களில் உள்ளனர். எனவே அவர்களின் நியமனங்கள் இரத்து செய்யப்பட வேண்டும். சர்வதேச நாணய நிதியத்தைக் கையாளும்போது நீங்கள்

16

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## இப்படியும் நடக்கிறது...!

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப் பட்டதும் நமது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இருப்பது தோற்றுப்போன பாராளுமன்றம் என்றும் அதனால், பாராளுமன்றத்துக்கு உடனடியாகத் தேர்தல் நடத்தப் படவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்திருந்ததை வாசகர்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

அப்போது, பாராளுமன்றத்துக்கு தேர்தல் நடத்துமாறு கூட்டமைப்பு கேட்பதை பார்த்து தெற்கில் இருந்து நண்பர் ஒருவர் பெருமையாகப் பேசினார்.

அது வேறு ஒன்றுமல்ல, எப்படிக் கேட்டாலும் இப்போதைக்கு தேர்தல் நடக்காது என்பதைத் தெரிந்துகொண்ட பின்னர், அப்படிக் கேட்பதில் ஒரு "தில்" லும் இல்லையே என்று அவருக்கு நான் பதிலளித்தேன். அப்படியொரு தேர்தல் வந் தால், இன்றைய நிலையில் கூட்டமைப்பு இன்னும் குறு கிவிடும். கூட்டமைப்புக்கு எதிரணியில் உள்ள தமிழ்த் தேசியக் கட்சிகள் பிரசாரம் செய்யாமலே தேர்தலில் வெற்றிபெற்று விடுவார்கள் என்பதும் கூட்டமைப்புக்கு தெரியாத விடயமல்ல.

இப்போது அதுவல்ல நாம் சொல்ல வருவது,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சர்வகட்சி அரசாங்கம் ஒன்றை அமைக்கும் தனது முயற்சிக்கு ஆதரவுகேட்டு கட்சித் தலைவர்களுக்கு அனுப்பிய கடிதத்தின் பிரதிகளை ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அனுப்பியிருக்கிறார்.

அது எதற்காக பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பவேண்டும் என்றும், இது அவர் கட்சிகளை உடைப்பதற்குப் பயன்படுத்தும் அவரின் உத்தி என்றும் சிலர் வாதிட்டு வருகின்றனர்.

ஆனால், ரணிலைத் தெரிந்த இன்னும் சிலரோ, இது பாராளுமன்ற உறுப்பினர்கள் ஊடாக கட்சித் தலைவர்களுக்கு நெருக்கடியைக் கொடுப்பதற்கான தந்திரமாகவும் எடுத்துக்கொள்ளலாம் என்கின்றார்கள்.

அதாவது, கடிதம் கிடைத்த பாராளுமன்ற உறுப்பி னர்கள், தத்தம் கட்சித் தலைவர்களுக்கு அதில் சேரவேண் டியதன் அவசியத்தை வலியுறுத்துவதற்கும் இந்தக் கடிதம் உதவலாம் என்கின்றனர்.

எது எப்படியோ, நாடு இன்று எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடிக்கு ஒரு சர்வகட்சி அரசாங்கம் ஒன்று அமையுமானால், அது பல விடயங்களுக்கு தீர்வைக் கொண்டுவர முயலலாம்.

அதனால்தான், இந்த சர்வகட்சி யோசனையை கூட்டமைப்பும் ஆதரித்திருக்கின்றது.

கூட்டமைப்பு, அந்த சர்வகட்சி யோசனையை வரவேற் றிருப்பது குறித்து செய்திகள் வெளிவந்த மறுநாள், லண்டனில் இருந்து நண்பர் ஒருவர் தொடர்புகொண்டு,

"கூட்டமைப்பு அந்த யோசனையை வரவேற்றிருப்பதால், அது சர்வகட்சி அரசாங்கத்தில் இணையுமா என்று கேட்டார். அப்போது இந்த ஊர்க்குருவி தனது கருத்தை அவருக்கு முன்வைத்தபோது, கூட்டமைப்பு சர்வகட்சி அரசில் சேரும் என்ற பேச்சுக்கே இடமில்லை என்றே நம்புவதாக அவருக்கு பதிலளித்தது. சிலவேளைகளில் அதில் சேரவேண்டும் என்று கூட்டமைப் பின் உறுப்பினர்கள் சிலர் விரும்பினாலும்கூட, அப்படி யொரு தற்கொலை முடிவை கூட்டமைப்பு எடுக்காது என்று நம்பலாம் என்றும் அந்த நண்பருக்கு சொன்னேன்.

அப்படியெனில் இதனை வரவேற்பது எதற்காக என்று நண்பர் திரும்பிக்கேட்டார்.

"இதைக்கூடவா புரிந்துகொள்ள முடியவில்லை. இன்றுள்ள நிலையில் சஜித்தின் கட்சியும் இணைந்து கொண்டால் மாத்திரமே அது சர்வகட்சி அரசாக முடியும். அப்படி சர்வகட்சி அமைந்தாலும் அதில் ஜே. வி. பியும் கூட்டமைப்பும் கலந்துகொள்ளாது. ஜே. வி. பியிடம் மூன்று எம்.பிக்களும் கூட்டமைப்பிடம் பத்து எம். பிக்களும் இருக்கின்றபோது யாருக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி கிடைக்கும்?" என்று அவரிடமே திரும்பிக்கேட்டேன்.

"ஓ... நீங்கள் அப்படி வருகிறீர்களா என்று கேட்டவர், அப்படியொரு நிலை வந்தால், தமிழர் ஒருவர் இரண்டு தடவை எதிர்க்கட்சித் தலைவராக இருந்தார் என்ற பெருமையாவது சம்பந்தன் ஐயாவுக்கு கிடைக்கட்டுமே" என்றார் அந்த நண்பர்.

"அப்படியொரு நிலை வந்தால், பாராளுமன்றத்திற்கு நடந்து வந்து தனது ஆசனத்தில் அமருவதற்கும் மூன்று பேர் துணையோடு வந்த ஒரேயோர் எதிர்க்கட்சித் தலைவர் என்ற பெருமையையும்தானே பெறுவார் என்று சொல்ல வேண்டும் போலவும் இருந்தது.

**- ஊர்க்குருவி.**

# தெய்வீக திருக்கூட்டத் தொடர்

*நல்லூர், ஓக. 02*

நல்லைக் கந்தன் ஆலய பெருந்திருவிழாவை முன்னிட்டு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத் தில் சிறப்பு தெய்வீகத் திருக்கூட்டத் தொடர் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தால், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்திலே, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத் தின் ஏற்பாடு மற்றும் அனுசரணையோடும், அகில இலங்கை இந்து மாமன்றத்தின் இணை அனுசர ணையோடும் முன்னெடுக்கப்பட்டுவரும் தெய்வீ கத் திருக்கூட்டத் தொடர் இடம்பெறவுள்ளது.

முதல் நாளான இன்று செவ்வாய்க்கிழமை 5 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்திலே, நல்லை ஆதீன முதல்வர் வண. ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர

தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகளும் அமெரிக்கா, ஹாவாய் சைவ ஆதீனக் குருதேவர் சிவாய சுப்பிரமணிய சுவாமிகளின் சீடர், வண. ஆன்மிகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகளும் திருமுன்னிலை வகிக்க, யாழ். பல்கலைக்கழக இந் துக் கற்கைகள் பீடத்தின், இந்துநாகரிகத் துறைத் தலைவர், கலாநிதி த.முகுந்தன் தலைமையில் இனிதே ஆரம்பமாகவுள்ளது.

நல்லூர், பிரதேச செயலர் பிரிவின், சைவச் சிறு வர் இல்ல அறநெறிப் பாடசாலை நிர்வாகத்தின் நிகழ்வு ஏற்பாட்டில், அறநெறிப் பாடசாலை மாணவர்களின் நிகழ்வுகள் அரங்கேறவுள்ளன. சிறப்பு நிகழ்வுகள் வரிசையில், 'நாவலர் பெருமான் நம் வாழ்வியலுக்கான வழிகாட்டி' என்னும் தலைப்பில் இளம் சைவப்புலவர் நித்தியபாபுதர னின் சிறப்புச் சொற்பொழிவும், நுண்கலைமாணி செல்வி நிரஞ்சலா சுந்தரலிங்கத்தின் மாணவர் களின் வயலின் இசை கச்சேரி நிகழ்வும் இடம் பெறவுள்ளது.

(ஐ)

# மடு மாதா ஆவணித் திருவிழா ஆயத்த ஏற்பாட்டுக் கூட்டம்!

*மன்னார், ஓக. 02*

எதிர்வரும் 15 ஆம் திகதி நடைபெறவுள்ள மடு ஆவணி திருவிழா தொடர்பாகவும் முன் ஆயத்த நடவடிக்கைகள் தொடர்பாகவும் நேற்று திங்கட் கிழமை மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மெல் தலைமையில் மாவட்ட செயலகத்தில் கூட்டம் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் மன்னார் மறை மாவட்ட ஆயர் இமானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை, மன்னார் மறைமாவட்ட குரு முதல் வர் கிறிஸ்து நாயகம் அடிகளார், மடு திருத்தல பரிபாலகர் எஸ்.ஜே.பெப்பி சோசை அடிகளார், சுகாதார திணைக்கள அதிகாரிகள், திணைக்கள தலைவர்கள், பொலிஸ், இராணுவ அதிகாரிகள் என பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது, தற்போதைய சூழ்நிலையில் எரி பொருள் தட்டுப்பாடு ஏற்பட்டு இருந்தாலும், சுமார் 4 இலட்சத்திற்கும் அதிகமான பக்தர்கள் நாட்டின் பல பாகங்களில் இருந்தும் வருவார்கள் என்ற காரணத்தால் அதற்கு அமைவாக திணைக்களங்கள் தொடர்பான சேவைகளை ஏற் பாடு செய்யப்பட்டுள்ளது.

விசேட ரயில் சேவைகள் கொழும்பு, அநுராத புரத்திலிருந்து மடு ரயில் நிலையத்துக்கு எதிர்வரும் 13ஆம், 14ஆம், மற்றும் 15 ஆம் திகதிகளில் இடம் பெறவுள்ளன.

மடு ரயில் நிலையத்தில் இருந்து மடு திருத் தலத்திற்கு பேருந்து சேவைகளும் ஏற்பாடு செய் யப்பட்டுள்ளன.

மேலும் கொரோனா தொற்று மீளவும் பரவ ஆரம்பித்துள்ளது. இதனால், பொதுமக்கள் கட் டாயம் முகக்கவசம் அணிதல் உள்ளிட்ட சுகாதார விதிகளை இறுக்கமாக பின்பற்றச் செய்யவும் ஆலோசிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# மரண அறிவித்தல்

## திருமதி சாந்தினி மகேந்திரன்



**பிறப்பு** 22 - 06 - 1966 **இறப்பு** 28 - 07 - 2022

யாழ். கூவில் புலோலி தென்மேற்கு பருத்தித்துறையைப் பிறப்பிட மாகவும், சுவிஸ் Baden Untersiggenthal ஐ வதிவிடமாகவும் கொண்ட சாந்தினி மகேந்திரன் கடந்த 28-07-2022 வியாழக்கிழமை அன்று சுவிஸில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற சரவணை – தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகளும், சிவகுரு – கனகம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும்,சிவகுரு மகேந்திரன் அவர்களின் அன்பு மனைவியும்,மயூரி, நிசாந், கிஷாந் ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவனேஸ்வரன்(இலங்கை), கனேந்திரன்(சுவிஸ்), புவனேந்திரன்(பிரான்ஸ்), யோகேந்திரன்(சுவிஸ்), சியாமளா (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரியும்,அழகேஸ்வரி, சித்திரா, இனிற்ராவதி, பிரியதர்சினி, ஜீவரட்ணம், காலஞ்சென்ற மங்களேஸ்வரி, மஞ்சுளா(இலங்கை), மனோகரன்(சுவிஸ்), இரத்தினேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும்,ஜெனார்த்தன்(சுவிஸ்), சுபசனா(சுவிஸ்), காலஞ்சென்ற புனிதவதி, பத்மாவதி(லண்டன்), தமயந்தி (சுவிஸ்), வினோதன்(லண்டன்), தயாழினி, ஜெயக்குமார், உதயகுமார், சசிக்குமார், விஜிக்குமார், ராஜ்குமார் (குவைத்), ராதா, சுஜாதா, விஜிதா(சுவிஸ்), லவன்(சுவிஸ்), தர்சன், அஜித், சஜிதா, எழில், துளசி, திவ்யா, நிறோசன், நிறோசா, லக்சன், லக்சியா, தனுஷ், தனுஜா, அனுஜா ஆகியோரின் அன்பு அத்தையும்,மதீஸ் மாறன், ஜெக மாறன், மதுசா, நிதுசா, அபிசன் ஆகியோரின் அன்பு பெரியம்மாவும்,சிவலிங்கம்(ஓய்வுபெற்ற கிராம சேவகர்), காலஞ்சென்ற சிவக்கொழுந்து, ஜெஸ்வீன்(சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகலியும்,ரவிராஜ் சித்திரா தம்பதிகளின் அன்புச் சம்பந்தியும்,ஜெனீஷ், ஜெய்ஷ், ஜெஷ்னா ஆகியோரின் பாசமிகு அன்பு அம்மம்மாவும்,சஜான் அவர்களின் அன்பு அப்பம்மாவும் ஆவார்.

*பார்வைக்கு :*
Tuesday, 02 Aug 2022 10:00 AM - 8:00 PM
Krematorium Liebenfels Zürcherstrasse 108, 5400 Baden, Switzerland
*கிரியை :*
Wednesday, 03 Aug 2022 9:00 AM - 12:00 PM
Krematorium Liebenfels Zürcherstrasse 108, 5400 Baden, Switzerland
*தகனம்:*
Wednesday, 03 Aug 2022 12:00 PM - 2:00 PM
Krematorium Liebenfels Zürcherstrasse 108, 5400 Baden, Switzerland

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

*தொடர்புகளுக்கு:*
**மகேந்திரன் - கணவர் - Mobile : +41792024664**
**நிசாந் - மகன் - Mobile : +41796674384**
**ஜெனார்த்தன் - மருமகன் - Mobile : +41797055635**

தகவல்:
**ஜெனார்த்தன்**
(மருமகன்)

ஈழநாடு
Eelanadu
02.08.2022 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், ஆடி 17

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

## கூட்டமைப்பின் சீனா தொடர்பான நிலைப்பாடு?

சீனாவின் ஆய்வுக் (லுரயெ றுயபெ 5) கப்பலொன்று, அம்பாந்தோட்டை துறைமுகத்தை நோக்கி, விரைந்து கொண்டிருக்கின்றது. குறித்த கப்பல், எதிர்வரும் 11ஆம் திகதி, அம்பாந்தோட்டையில் நங்கூரமிடவுள்ளது. எரிபொருள் நிரப்புவதற்காகவே குறித்த கப்பல், அம்பாந்தோட்டையில் தரித்து நிற்கவுள்ளதாக, சீனா அறிவித்திருக்கின்றது. குறித்த ஆய்வுக் கப்பலானது செய்மதி மற்றும் கண்டம் விட்டு கண்டம் பாயும் பாலிஸ்ரிக் ஏவுகணைகளை கண்காணிக்கும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றது. இந்த நிலையில், குறித்த கப்பல், இந்தியாவுக்கு மிகவும் அருகாமையில் தரித்து நிற்பதானது, இந்தியாவின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானது - என்னும் கரிசனை இந்திய பாதுகாப்பு வட்டாரங்களில் ஏற்பட்டிருக்கின்றது. மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்திலும் இது போன்றதொரு சம்பவம் இடம்பெற்றிருந்தது.

அதாவது, 2014இல், இராணுவ நீர்மூழ்கிகள் கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிட்டன. இதனை புதுடில்லி கடுமையாக ஆட்சேபித்திருந்தது. இதன் விளைவாக, புதுடில்லிக்கும் கொழும்புக்கும் இடையிலான உறவிலும் கடுமையான விரிசல்கள் ஏற்பட்டன. அப்போது கோட்டாபய ராஜபக்ஷவே பாதுகாப்பு செயலாளராக இருந்தார். 2015இல் மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியும் கவிழ்ந்தது. தனது தோல்விக்கு இந்திய உளவுத் துறையான “றோ“வே காரணமென்றும் மகிந்த பகிரங்கமாக குற்றம்சாட்டியிருந்தார். ஆனால், தற்போது, ரணில் விக்கிரமசிங்க நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக பொறுப்பேற்றிருக்கின்ற சூழலில் மீண்டுமொரு நெருக்கடி ஏற்பட்டிருக்கின்றது.

குறித்த கப்பலின் வரவு, ரணில் விக்கிரமசிங்க பொறுப்பேற்பதற்கு முன்னரே திட்டமிடப்பட்டதாகவும், இது தொடர்பில் இந்தியாவுடன் உரையாடிக் கொண்டிருப்பதாகவும் ஜனாதிபதி செயலகம் அறிவித்திருக்கின்றது. வழமைக்கு மாறாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதனை கண்டித்திருக்கின்றது. இது தொடர்பில் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுக்கு தெரிந்திருக்கவில்லை. சில தினங்களுக்கு முன்னர், தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான எம். ஏ. சுமந்திரன் மற்றும் இராசமாணிக்கம் சாணக்கியன் ஆகியோர், சீனத் தூதுவரை இரகசியமாக சந்தித்ததான செய்திகள் உறுதிப்படுத்தப்பட்டிருந்தன. இந்த சந்திப்பு தொடர்பிலும் கூட்டமைப்பின் பங்காளிகள் அறிந்திருக்கவில்லை. குறித்த சந்திப்பு ஏன் இடம்பெற்றது என்பது தொடர்பிலும் கூட்டமைப்பு மக்களுக்கு விளக்கமளிக்கவில்லை. இந்த நிலையில், கூட்டமைப்பு திடீரென்று, சீன கப்பல் பிராந்தியத்தின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானது என்றும் இலங்கை, சீனாவின் இராணுவ பிரசன்னத்திற்கு இடமளிக்கக் கூடாதென்றும் - ருவிட்டர் தகவலொன்றை வெளியிட்டிருக்கின்றது.

கூட்டமைப்பிடம் சர்வதேச விவகாரங்கள் தொடர்பில் தெளிவானதொரு கொள்கை நிலைப்பாடு எப்போதுமே இருந்ததில்லை. தெளிவான கொள்கை நிலைப்பாடுகள் இல்லாதபோது, ஒரு கட்சி அமைதி காப்பதே சரியானதாக இருக்கும். ஏனெனில், இன்று, சீன இராணுவ பிரசன்னம் மற்றும் பிராந்திய பாதுகாப்பு தொடர்பில் கரிசனை வெளியிட்டிருக்கும் கூட்டமைப்பினர், ரணில் - மைத்திரி ஆட்சி காலத்தில் தேனிலவில் இருந்தனர். அப்போதுதான், குறித்த அம்பாந்தோட்டை துறைமுகம், சீன நிறுவனத்துக்கு 99 வருட குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. அம்பாந்தோட்டை துறைமுக விவகாரம் என்பது, அமெரிக்காவை பொறுத்தவரையில், சீனாவின் கடன்பொறி இராஜதந்திரத்துக்கான ஓர் உதாரணமாகும்.

உண்மையிலேயே இவ்வாறான நடவடிக்கைகள் இந்தியாவின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும், பிராந்தியத்தில் பதற்றங்களை அதிகரிக்கும் - என்பது தொடர்பில், கூட்டமைப்பிடம் சரியானதோர் அரசியல் பார்வை இருந்திருந்தால், அப்போதே இந்த விடயத்தை கூட்டமைப்பு எதிர்த்திருக்க வேண்டும். இத்தனைக்கும் சம்பந்தன், அப்போது இந்த நாட்டின் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தார். ஓர் எதிர்க்கட்சித் தலைவரின் பிரதான கடமை என்ன? ஆளும்தரப்பு தவறான விடயங்களை முன்னெடுக்கின்றபோது, அதனை தட்டிக் கேட்பதுதானே! ஆனால், அப்போது சம்பந்தனும் சுமந்திரனும் இது தொடர்பில் மௌனமாக இருந்தனர். அமைதியாக இருப்பதன் மூலம், சீன நிறுவனத்துக்கு அம்பாந்தோட்டை துறைமுகத்தை வழங்குவதை ஊக்குவித்தனர். அப்போதில்லாத அக்கறை இப்போது எங்கிருந்து வந்தது? ஒரு வேளை ரணில் விக்கிரமசிங்கவுக்கு சங்கடங்களை கொடுக்க வேண்டும் என்னும் நோக்கிலிருந்துதான் இந்த விடயமும் நோக்கப்படுகின்றதா?

# குட்டையை குழப்பும் சீனாவின் “யுவான் வாங் -5”!

அலசுவது இராஜதந்திரி

இலங்கை மீளமுடியாத கடன் சுமையால் தவித்துக் கொண்டிருக்கும் இத்தருணத்தில் சீனாவின் ஆகாயவெளி உளவுக்கப்பலான “யுவான் வாங்-5“ இலங்கையின் அம்பாந்தோட்டை துறை முகம் நோக்கி நகர ஆரம்பித்துள்ளதாகதெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை தற்போது அதன் பிராந்திய வெளியுறவுக்கொள்கை தொடர்பாக இந்திய மற்றும் மேற்கத்தேய நாடுகளினால் உன்னிப்பாக நோட்டமிடப்படும் நிலையில் இருக்கின்றது.

சீனாவின் வான் மற்றும் விண் வெளி ஆய்வுக்கப்பலான “யுவான் வாங்-5“ அம்பாந்தோட்டை துறைமுகம் நோக்கி வருவது குறித்து கருத்து வெளியிட்டுள்ள இலங்கையின் இராணுவ ஊடக பேச்சாளர் இம்மாதம் 11ஆம் திகதி முதல் 17ஆம் திகதி வரை சீனாவின் வான் மற்றும் விண்வெளி ஆய்வுக்கப்பலான யுவான் வாங்-5 அம்பாந்தோட்டையில் நங்கூரமிட்டு நிற்கும் என்று கூறியுள்ளார்.

இலங்கை தற்போது பாரிய பொருளாதார நெருக்கடிக்குள்ளாகியுள்ளது. இந்த நெருக்கடி நிலையிலிருந்தும் மீள்வதற்கு இந்தியா இதுவரை 3 பில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கைக்கு கடனாக வழங்கியுள்ளது. இத்தகைய பின்னணியில் இந்தியாவுக்கும் சீனாவுக்குமிடையிலான இராஜதந்திர நெருக்கடியை இலங்கை நன்கறிந்துள்ள நிலையில் சீனக் கப்பலை இலங்கையின் அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வர அனுமதித்துள்ளமை தற்போதைய சூழலில் இலங்கையை இந்தியா சந்தேகக்கண்கொண்டு நோக்கும் நிலையையே தோற்றுவித்துள்ளது.

வான் மற்றும் விண்வெளி ஆய்விலும் இந்தியாவும், சீனாவும் ஒன்றையொன்று போட்டி போடுபவையாகவே இருக்கின்றன. செய்மதி மூலமான உளவு பார்க்கும் நடவடிக்கைகள் தற்போது விரிவான முறையில் வல்லரசு பலம் கொண்ட நாடுகளால் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கு இந்தியாவும், சீனாவும் விதிவிலக்கல்ல.

இந்தியாவின் கடல் ஆதிக்க வலயத்தை சீனக் கப்பல்களால் நெருங்கமுடியாது.

இதன்காரணமாகவே சகல ஆய்வுகூட வசதிகளையும் செய்மதித்தொடர்பு வல்லமையையும் கொண்ட சீனாவின் யுவான் வாங்-5 ஆய்வுக்கப்பல் இலங்கையின் தென்முனையில்

சீனாவால் கட்டப்பட்டுள்ள அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வந்து தனது நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ள தென்பதே இந்தியாவின் கணிப்பாக இருக்கின்றது.

தென்கிழக்காசிய கடல் பிராந்தியத்தில் சீனாவுக்கு கீழேயுள்ள தாய்வான் தீவு மற்றும் இந்தியாவுக்கு கீழேயுள்ள இலங்கை ஆகிய இரண்டு தேசங்களும் இந்து சமுத்திரம் மற்றும் தென்சீனக்கடல் வலயத்தில் சீனாவின் முழுமையான ஆதிக்கத்துக்கு உள்ளாகி விடுமோ என்பதே இந்தியா மற்றும் மேற் கத்தேய நாடுகளின் சந்தேகமாக இருக்கின்றது.

ஏற்கனவே, இலங்கையில் வடக்கு - கிழக்கு யுத்தம் முடிவுக்கு வந்ததுமே காலிமுகத்திடல் கடல் பிரதேசத்தில் சீனா இலங்கையின் தரையமைப்பையே மாற்றும் வகையில் கொழும்பு துறைமுக நகர அபிவிருத்தி திட்டத்தை மேற்கொண்டுள்ளது.

இந்தத் திட்டம் காரணமாக இந்தியா கிலேசமடைந்துள்ளதையும் அவதானிக்க முடிகின்றது. இருந்தபோதிலும் தென்னாசிய பிராந்திய நலன்களை பொறுத்தவரை இலங்கை ஒரு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நாடாக இருப்பதையும் இலங்கையுடன் தனது பிராந்திய நலன்களைப்பேணும் விதத்தில் இராஜதந்திர உறவுகளைப்பேண வேண்டுமென்பதில் இந்தியா முனைப்பாக இருக்கின்றது.

இலங்கையின் வெளியுறவுக்கொள்கை என்பது அண்மைக்காலங்களில் மிக நலிவுற்றதாக இருக்கின்ற நிலையில் இந்திய - சீன உறவுகளை சரியான சமநிலையில் பேணுவது

தொடர்பில் இலங்கை எவ்வளவு தூரம் இராஜதந்திர உறவுகளை மேற்கொள்கின்ற தென்பதே பிரதான வினாவாக இருக்கின்றது.


இத்தகைய பின்னணியிலேயே சீனாவின் யுவான் வாங்-5 ஆய்வுக் கப்பலின் வருகை குறித்து இந்தியா தனது கரிசனையை வெளியிட ஆரம்பித்துள்ளது. எதிர்கால இராணுவ நடவடிக்கைகளைப் பொறுத்தவரை செய்மதிகளின் பங்களிப்பே பெரும் பங்கு வகிப்பதாக அமையும்.

எரிபொருள் கப்பலையும், சமையல் எரிவாயுக் கப்பலையும், உணவுக் கப்பலையும் தற்போது எதிர்பார்த்திருக்கவேண்டிய நிலையிலுள்ள இலங்கையினால் இந்திய - சீன கடற்படைகள் மற்றும் வான்படைகளின் வல்லமைக்கு ஈடுகொடுக்க முடியாது.

2014ஆம் ஆண்டு சீனாவின் அணுசக்தி நீர்மூழ்கி கப்பலான “சாங்செங்-2” இலங்கை வந்திருந்தமை தொடர்பாகவும் இந்தியா தனது கரிசனையை வெளியிட்டிருந்தது.

தற்போது சீனாவின் வான்வெளி மற்றும் விண்வெளி ஆய்வுக்கப்பலான “யுவான் வாங்-5” அம்பாந்தோட்டைக்கு அடுத்தவாரம் வரவிருப்பது பொருளாதார ரீதியாக இலங்கை பின்னடைவுகளை எதிர்நோக்கியுள்ள இத்தருணத்தில் இந்திய-இலங்கை உறவை பெரிதும் மலினப்படுத்திவிடுமோ என்றே சிந்திக்க வேண்டியுள்ளது.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஓகஸ்ட் - 02 செவ்வாய்க்கிழமை
சுபகிருது வருடம் - ஆடி 17
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 03.00 - 04.30
திதி : பஞ்சமி




**மேடம்**
நீண்டநாள் முயற்சி ஒன்று வெற்றியாகும். பிள்ளைகளால் நன்மை உண்டு.பணியிடத்தில் உங்கள் ஆலோசனையை ஏற்பார்கள். உறவினர்களால் உதவி உண்டாகும். உங்கள் செல்வாக்கு உயரும்.

**இடபம்**
அரசு வழியிலான எதிர்பார்ப்பு நிறைவேறும். பகைவர் தொல்லை அகலும்.வியாபாரத்தில் இருந்த பிரச்னைகளை சரி செய்வீர்கள். உங்கள் அணுகுமுறையால் ஆதாயம் கூடும்.எதிர்பார்த்த வரவு கிடைக்கும்.

**மிதுனம்**
தடைகளை சரி செய்து வெற்றி அடைவீர்கள் உங்கள் செயல் லாபமாகும்.தொழிலில் சில நுணுக்கங்களைக் கற்றுக் கொள்வீர்கள். புதிய முயற்சி ஆதாயமாகும். துணிச்சலுடன் செயல்படுவீர்கள்.

**கடகம்**
உங்கள் வார்த்தைகளுக்கு மதிப்பு அதிகரிக்கும். எதிர்பார்ப்பு நிறைவேறும்.எதிர்பார்த்த வருமானம் வந்து சேரும். பொன் பொருள் சேர்க்கை உண்டாகும்.இழுபறியாக இருந்த முயற்சி நிறைவேறும்.

**சிம்மம்**
மனதில் குழப்பத்திற்கு இடமளிக்காதீர்கள். திட்டமிட்ட செயல்கள் வெற்றியாகும். வேலைப்பளு அதிகரிக்கும். பணிகளில் கூடுதல் கவனம் தேவை. அடுத்தவர் பிரச்னைகளில் தலையிட வேண்டாம்.

**கன்னி**
பணத்தட்டுப்பாட்டின் காரணமாக முயற்சிகள் இழுபறியாகும். சிந்தித்து செயல்படவும். தொழிலில் எதிர்பார்த்த லாபம் காண முடியாமல் போகும். எதிர்பார்த்த வரவு தள்ளிப் போகும்.

**துலாம்**
எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும். இழுபறியாக இருந்த முயற்சி நிறைவேறும்.பணியாளர்கள் சிலருக்கு புதிய பொறுப்புகள் கிடைக்கும். செல்வாக்கு உயரும். நண்பர்களால் ஆதாயம் உண்டாகும்.

**விருட்சிகம்**
நீண்ட நாள் எண்ணம் ஒன்று நிறைவேறும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். தொழிலை விரிவு செய்வீர்கள். பணியாளர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.எதிர்பார்த்த பணம் கைக்கு வந்து சேரும்.

**தனுசு**
நினைத்ததை சாதிப்பீர்கள். உங்களின் மதிப்பு உயரும். பூர்வீக சொத்துகளில் ஏற்பட்ட பிரச்னைகள் விலகும். விலகிச் சென்ற உறவினர்கள் உங்கள் உதவியை எதிர்பார்த்து வருவார்கள்.

**மகரம்**
உங்களுக்கு உதவி செய்வதாக சொன்னவர்களை சந்திக்க முடியாமல் போகும். எதிர்பார்ப்பு நிறைவேறாமல் போகும்.வீண் பிரச்னைகளை சந்திக்க வேண்டி வரும். பொறுமைக் காப்பது நல்லது.

**கும்பம்**
உங்கள் செயல்களில் லாபம் உண்டாகும். நினைத்ததை சாதிக்கும் நாள். தம்பதி இடையே ஒற்றுமை கூடும். உங்கள் திறமையால் எண்ணியதை அடைவீர்கள்.தொழில் தொடங்கும் முயற்சி நிறைவேறும்.

**மீனம்**
பணியிட பிரச்னை தீரும். உங்களுக்கு எதிராக செயல்பட்டவர்கள் மனம் மாறுவர்.நெருக்கடிகள் நீங்கும். எதிர்பார்த்த நன்மைகளை அடைவீர்கள். பணியிடத்தில் உங்களின் செல்வாக்கு உயரும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

# தமிழகம் முழுவதும் 5ஆம் திகதி மறியல்!

## காங்கிரஸ் கட்சி அறிவிப்பு

*சென்னை, ஓக. 02*

எதிர்வரும் 5ஆம் திகதி தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்ட, வட்டார, நகர அளவில் மறியல் போராட்டத்தை நடத்த வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்களை தமிழக காங்கிரஸ் நிறைவேற்றியுள்ளது.

எதிர்கட்சித் தலைவர்கள் மீது அமுலாக்கத் துறை மூலம் பா. ஜ. க. அரசு அடக்குமுறையில் ஈடுபட்டுள்ளதாக காங்கிரஸ் கட்சி கண்டனம் தெரிவித்துள்ளது.

தமிழக காங்கிரஸ் குழுவின் தலைவர் கே. எஸ். அழகிரி தலைமையில் சென்னை சத்தியமூர்த்தி பவனில் நேற்று நடைபெற்ற கூட்டத்திலேயே இந்தத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

அதில், அகில இந்திய காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, தலைவர் ராகுல் காந்தி ஆகியோரை நஷனல் ஹெரால்ட் பொய் வழக்கில் அழைப்பாணை அனுப்பி, காங்கிரஸ் கட்சியின் செயல்பாடுகளை முடக்குவதற்கு பா. ஜ. க அரசு அமுலாக்கத்துறையை ஏவிவிட்டுள்ளது. ஆனால், இதைக் கண்டு அஞ்சாமல் அமலாக்கத் துறையின் அடக்குமுறையை அரசியல் பேராண்மையோடு எதிர்கொண்டதை இக்கூட்டம் நெஞ்சார பாராட்டுகிறது.

எதிர்கட்சித் தலைவர்கள் மீது அரசு தொடுத்துள்ள அடக்குமுறையை இக்கூட்டம் வன்மையாக கண்டிக்கிறது. இந்திய ஜனநாயகம் சந்தித்து வருகிற சோதனையான காலகட்டத்தை இந்திய தேசிய காங்கிரஸ் கடுமையான போராட்டங்களின் மூலம் எதிர்கொண்டு பாசிச பா. ஜ. க. ஆட்சியை அகற்றும் வரை ஓய மாட்டோம் என்பதை இக்கூட்டம் வலியுறுத்துகிறது.

மத்தியில் பா. ஜ. க. ஆட்சி அமைந்தது முதல் தவறான பொருளாதார கொள்கை காரணமாக அனைத்து தரப்பு மக்களும் கடுமையாக பாதிக்கப்பட்டு வருகிறார்கள்.

சமீபகாலத்தில் பெற்றோல், டீசல், சமையல் எரிவாயு சிலிண்டர் விலை உயர்வு வரலாறு காணாத உச்சத்தை எட்டியுள்ளது. இதனால் அத்தியாவசியப் பொருட்களின் விலை கடுமையாக உயர்ந்து வருகிறது. மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இவற்றைக் கண்டித்து எதிர்வரும் 5ஆம் திகதி - வெள்ளிக்கிழமை நாடு முழுவதும் மாபெரும் மறியல் போராட்டத்தை நடத்த வேண்டுமென அகில இந்திய காங்கிரஸ் அறிவுறுத்தியதன் அடிப்படையில் தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்ட, வட்டார, நகர அளவில் மறியல் போராட்டத்தை நடத்திட வேண்டுமென இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது. (ஐ)

# மறைக்கப்பட்ட ஜெயலலிதாவின் பெயரை மீண்டும் அரசு தெரியப்படுத்த வேண்டும்!

## பன்னீர்செல்வம் கோரிக்கை

*சென்னை, ஓக. 02*

“தேர்தல் நடத்தை விதிமுறைகளால் எங்கெல்லாம் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் பெயர்கள் மறைக்கப்பட்டதோ, அவற்றையெல்லாம் சரி செய்ய நடவடிக்கை எடுக்குமாறு தமிழக அரசு அதிகாரிகளுக்கு உத்தரவிட வேண்டும்” என்று ஓ.பன்னீர்செல்வம் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், ”விலையில்லா அரிசி வழங்கும் திட்டம், கட்டணமில்லா கல்வி வழங்கும் திட்டம், விலையில்லா நோட்டுப் புத்தகங்கள், பாடப் புத்தகங்கள், கல்வி உபகரணங்கள், புத்தகப் பைகள், காலணிகள் வழங்கும் திட்டம், பள்ளி மாணவ, மாணவியருக்கு இலவச மிதி வண்டி வழங்கும் திட்டம், மடிக்கணனி வழங்கும் திட்டம், ஆலயந்தோறும் அன்னதானம் வழங்கும் திட்டம் என தமிழகத்தை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் சென்று தமிழக மக்களின் மனங்களில் நீங்கா இடத்தைப் பிடித்தவர் மறைந்த முதல்வர் ஜெயலலிதா.

தன்னுடைய தன்னலமற்ற சேவையினால், அர்ப்பணிப்பு உணர்வினால், ‘எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும் இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்’ என்ற குறிக்கோளை எய்தும் வண்ணம் பல்வேறு நலத் திட்டங்களை மக்களுக்கு அளித்த ஜெயலலிதாவின் பெயரில் பல்வேறு திட்டங்கள் கொண்டு வரப்பட்டதோடு, பல்வேறு இடங்களுக்கு அவரின் பெயர் சூட்டப்பட்டது.

தேர்தல் காலத்தில் இந்தப் பெயர்கள் மறைக்கப்பட்டன. எனினும், தேர்தல் முடிந்த பின்னர் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. உள்ளாட்சி தேர்தல் முடிந்து மறைக்கப்பட்ட பெயர்கள் அப்படியே மறைத்தே உள்ளன.

ஆனால், இந்த வழக்கமான நடைமுறை மேற்படி மேம்பால விடயத்தில் பின்பற்றப்படவில்லை. எனவே, ஜெயலலிதாவின் பெயர் தெரியும் வண்ணம் செய்ய வேண்டும். இதனை செய்யும் கடமை தமிழக அரசுக்கு உண்டு.

எனவே, தமிழக முதல்வர் உடனடியாக தலையிட்டு, எங்கெல்லாம் பெயர்கள் தேர்தலுக்காக மறைக்கப்பட்டனவோ, அவற்றையெல்லாம் சரி செய்ய நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட வேண்டுமென்று அ. தி. மு. க. சார்பில் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்” என்றார். (ஐ)

# கடலின் நடுவே நினைவுசின்னம் அனுமதிபெறும் செயல் மும்முரம்!

*சென்னை, ஓக. 02*

கருணாநிதி நினைவிடத்தின் பின்பகுதியில் கடலுக்குள் 42மீற்றர் உயரத்தில் பேனா வடிவ நினைவுச் சின்னம் அமைப்பதற்கு, கடற்கரை ஒழுங்குமுறை ஆணைய அனுமதி பெறும் பணிகளை பொதுப்பணித் துறை தொடங்கியுள்ளது.

மறைந்த முன்னாள் முதல்வரும், தி. மு. க. தலைவருமான கருணாநிதிக்கு மெரினாவில் நினைவிடம் அமைக்கப்படும் என தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் அறிவித்திருந்தார். இதன்படி 2.21 ஏக்கர் பரப்பளவில் ரூ. 39 கோடி மதிப்பீட்டில் நினைவிடம் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில், சில நாட்களுக்கு முன்பு கருணாநிதி நினைவிடத்தின் பின்பகுதியில் கடலுக்குள் 42 மீற்றர் உயரத்தில் பேனா வடிவ நினைவுச் சின்னம் அமைக்க தமிழ்நாடு கடலோர மண்டல ஆணையம் அனுமதி அளித்துள்ளது. கடலுக்குள் ரூ.81 கோடி செலவில் இந்த நினைவுச் சின்னம் அமைக்கப்படவுள்ளது.

இதற்கு சென்றடையும் வகையில் நினைவிடத்தில் இருந்து 290 மீற்றர் தூரத்திற்கு கடற்கரை, 360 மீற்றர் தூரத்திற்கு கடலிலும் என 650 மீற்றர் தொலைவுக்கு பாலம் அமைக்கபபடவுள்ளது.

இந்த பேனா நினைவுச் சின்னம் தொடர்பாக கடும் விமர்சனம் எழுந்து வரும் நிலையில், பேனா வடிவ நினைவுச் சின்னத்திற்கு கடற்கரை ஒழுங்குமுறை ஆணைய அனுமதி பெறும் பணிகளை பொதுப்பணித் துறை தொடங்கியுள்ளது.

# நல்லூருக்கு கொடிச் சீலை நேற்று எடுத்துவரப்பட்டது





படங்கள் : ஐ.சிவசாந்தன்

யாழ்ப்பாணம், ஒக. 02

நல்லூர் கந்தசுவாமி கோவில் கொடியேற்ற நிகழ்வுக்கு கொடிச்சீலை கையளிக்கும் நிகழ்வு நேற்று காலை நடைபெற்றது.

நல்லூர் கந்தசுவாமி வருடாந்த பெருந்திருவிழா இன்று முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 25 நாட்கள் மகோற்சவ திருவிழா நடைபெறவுள்ளது.

கொடியேற்ற நிகழ்வுக்காக கொடிச்சீலை கையளிக்கும் நிகழ்வை முன்னிட்டு சட்டநாதர் கோவிலை அண்மித்துள்ள வேல் மடம் முருகன் கோவிலில் நேற்று காலை 9 மணிக்கு நடைபெற்ற விசேட பூசை வழிபாடுகளை தொடர்ந்து, அங்கிருந்து சிறு தேரில் கொடிச்சீலை நல்லூர் ஆலயத்திற்கு கொண்டு செல்லப்பட்டு நல்லூர் ஆலய பிரதம குருக்களிடம் கையளிக்கப்பட்டது. (அ)

## எரிபொருள் நிலையத்தில் முறைகேடு என முறைப்பாடு

கிளிநொச்சி, ஒக. 02

முழங்காவில் நாச்சிக்குடா சந்தியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் முறைகேடு இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் முழங்காவில் நாச்சிக்குடா சந்தியில் அமைந்துள்ள பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் நிரப்பு நிலையத்திலேயே இவ்வாறு முறைகேடு இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

எரிபொருள் தீர்ந்துவிட்டதாக பொதுமக்கள் திருப்பி அனுப்பப்பட்ட பின்னர் கியூ. ஆர். பரிசோதனை இன்றி மோட்டார் சைக்கிள்கள் சிலவற்றுக்கு அங்கு எரிபொருள் நிரப்பப்பட்டதாக மக்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, கொள்கலன்களிலும் எரிபொருள் வழங்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பில் மக்கள் விசனம் வெளியிட்டனர்.

இவ்விடயம் தொடர்பில் பூநகரி பிரதேச செயலாளர் அகிலனிடம் வினவியபோது, நேற்று 31ஆம் திகதி வரை பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கண்காணிப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். நாடு முழுவதும் கியூ.ஆர். நடைமுறைப்படுத்தப்பட்ட நிலையில் எமது ஆளணியை நிறுத்திக்கொண்டோம்.

இந்த முறைப்பாடு தொடர்பில் உரிய விசாரணைக்குட்படுத்தப்படும்-என்றார். (அ)

## மஹிந்த, பசிலுக்கான பயணத் தடை நீடிப்பு

கொழும்பு, ஒக. 02

முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, முன்னாள் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ ஆகியோருக்கான வெளிநாட்டு பயணத் தடை எதிர்வரும் 4ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு காரணமானவர்களுக்கு எதிராக விசாரணை நடத்துமாறு கோரிய மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள் ளப்பட்டபோதே உயர் நீதிமன்றினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (அ)

# கறுப்பு ஆடுகளை விரட்டியடிப்போம்

### டலஸ் அணிக்கு மொட்டு கட்சி எச்சரிக்கை

கொழும்பு, ஒக்.02

**“ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியிலிருந்து சூழ்ச்சிக்காரர்களை வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.” - என்று அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.**



ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஊடக சந்திப்பு, கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்றது.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தலைமையில் செயற்படும் குழுவை, அவர்களின் பெயர்களை பட்டியலிடாது - மறைமுகமாக சாடினார் , பஸிலின் சகாவான செயலாளர் சாகர காரியவசம். டலஸ் அணிக்கு ‘சூழ்ச்சிக் குழு’ எனவும் அவர் பெயர் சூட்டினார்.

“கட்சியிலிருந்து சென்ற சிலர், நிலைமையை உணர்ந்து எம்மிடம் மன்னிப்பு கோரியுள்ளனர். மீள வருவது குறித்து பேச்சு நடத்துகின்றனர். இவர்கள் குறித்து எமக்கு பிரச்சினை இல்லை. எனினும் சூழ்ச்சிக்ககாரர்கள் நீக்கப்படுவார்கள். அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். கட்சி என்ற அடிப்படையில் நாம் முன்னோக்கி பயணிப்போம். சூழ்ச்சிக்காரர்கள் யாரென்பது நான் பெயர் குறிப்பிட்டு கூற விரும்பவில்லை. அவர்கள் யாரென்பதும், அவர்களால் தவறாக வழிநடத்தப்பட்டவர்கள் யாரென்பதும் மக்களுக்கு தெரியும்.” - என சாகர காரியவசம் சுட்டிக்காட்டினார்.

அதேவேளை, கோட்டாபய ராஜபக்ஷ இலங்கை பிரஜை. இங்கு வருவதற்கான உரிமை அவருக்கு உள்ளது. முன்னாள் ஜனாதிபதி என்ற வகையில் அவருக்கு பாதுகாப்பு வழங்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு உள்ளது.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தலைவர் மகிந்த ராஜபக்ஷவே, அதில் எவ்வித மாற்றமும் கிடையாது. சூழ்ச்சிக்காரர்களே, தலைமைப்பதவியில் மாற்றம் கோருகின்றனர் எனவும் சாகர காரியவசம் கடும் சீற்றத்தை வெளிப்படுத்தினார். (அ)

## வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவினரின் 100 நாள் செயல்முனைவு மன்னாரில் ஆரம்பம்!

மன்னார், ஒக. 02



“கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வுக்கான மக்கள் குரல்” எனும் தொனிப் பொருளில் வடக்கு-கிழக்கில் உள்ள 8 மாவட்டங்களில் நூறு நாட்கள் நடைபெற உள்ள செயல் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு நேற்று திங்கட்கிழமை காலை 11 மணியளவில் மன்னார் பிரதான சுற்றுவட்டத்துக்கு அருகாமையில் இடம்பெற்றது.

வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் அனுசரணையில் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் நூறு நாட்கள் நடைபெற உள்ள செயல் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வாகவே இது இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் யாட்சன் பிகிராடோ , மன்னார் மாவட்ட பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையத்தின் இணைப்பாளர் எஸ். திலீபன் மற்றும் கிராம மட்ட அமைப்புகள் ,விவசாய, மீனவ சங்கங்கள்,பெண்கள் அமைப்புகள் , மாணவர் அமைப்புகள்,சிவில் சமூக அமைப்புகள் மனித உரிமை ஆர்வலர்கள், மன்னார் மெசிடோ பணியாளர்களும் கலந்து கொண்டனர். (அ)

## பிறப்புச் சான்றிதழில் நேற்று முதல் தேசிய அடையாள இலக்கம் உள்ளீடு

கொழும்பு, ஒக. 02

புதிதாக பிறக்கும் குழந்தைகளுக்கான பிறப்புச் சான்றிதழில் தேசிய அடை யாள இலக்கத்தை உள்ளீடு செய்யும் நடைமுறை நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ஆட்பதிவு திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த 2021 டிசெம்பர் 14ஆம் திகதி அமைச்சரவை தீர்மானத்துக்கமைய, குழந்தை பிறப்பின்போது, பதிவாளர் நாயகம் திணைக்களத்தினால் வழங்கப்படும் பிறப்புச்சான்றிதழில், ஆட்பதிவு திணைக்களத்தினால் வழங்கப்படும் தேசிய அடையாள அட்டை இலக்கம் உள்ளீடு செய்யப்படவுள்ளது.

மேற்படி இரு திணைக்களங்களுக்கும் இடையில் இணையம் மூலம் தகவல்கள் பரிமாற்றம் இடம்பெறும்.

இந்த புதிய பிறப்புச் சான்றிதழ் வழங்கும், பரீட்சார்த்த திட்டம் கம்பஹா, தெஹிவளை, ஹங்குராங்கெத்த, குருநாகல், இரத்தினபுரி மற்றும் தமன்கடுவ ஆகிய பிரதேச செயலகங்கள் ஊடாக முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சர்வகட்சி அரசுக்கு எங்கள் கட்சி தயார்

## இராதாகிருஷ்ணன் கூறுகிறார்



கொழும்பு, ஒக. 02

"தமிழ் முற்போக்கு கூட்டணியானது, தேர்தலை மாத்திரம் இலக்கு வைத்து செயற்படும் கூட்டணி கிடையாது. அது மக்களுக் கான அரசியலை முன்னெடுக்கும் கூட்டணியாகும். எனவே, தலைமைப் பதவியில் மனோ கணேசன் நீடிப்பார். ஒன்றிணைந்தளமது பயணம் தொடரும்." - என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவருமான இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

நுவரெலியாவில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே பாராளுமன்ற உறுப்பினர் இராதாகிருஷ்ணன் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

சர்வகட்சி அரசமைப்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார். நாட்டின் நலன்கருதி இதில் இணையுமாறு அனைத்து பாராளுமன்ற உறுப் பினர்களிடமும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். சர்வகட்சி அரசையே நாடும், சர்வதேசமும் கூட எதிர்பார்க்கின்றது. நாமும் அதனை வர வேற்கின்றோம்.

சர்வகட்சி அரசு சம்பந்தமாக மலையக மக்கள் முன்னணி சாதகமான நிலைப்பாட்டில் இருந்தாலும், தமிழ் முற்போக்கு கூட்டணியாக எடுக்கப்படும் முடிவே அறிவிக்கப்படும்.

தமிழ் முற்போக்குக் கூட்டணி எதிர்வரும் 03 ஆம் திகதி கூடவுள்ளது.

அதன்பின்னரே சர்வகட்சி அரசில் இணைவதா அல்லது எமது வகிபாகம் எவ்வாறு அமையும் என்பது குறித்து அறிவிக்கப்படும்.

தமிழ் முற்போக்குக் கூட்டணி என்பது தேர்தலுக்காக முளைத்த கூட்டணி அல்ல.

அது மக்களுக்கான- கொள்கை அடிப்படையிலான கூட்டணி. எமது கூட்டணிக்குள் எவ்வித பிளவும் இல்லை. ஓரணியில் எமது பயணம் தொடரும். கூட்டணியின் தலைமைப்பதவியில் நீடிக்குமாறு மனோ கணேசனிடம் நாம் கேட்டுக்கொண்டுள்ளோம்.

எமது மக்களுக்கான வேலைத் திட்டத்தை கூட்டாக முன்னெடுப்பதே சிறந்ததாக அமையும்.

சர்வக்கட்சி அரசு சம்பந்தமாகவே தற்போது பேசப்படுகின்றது. மாறாக அமைச்சு பதவி பற்றி பேசப்பட வில்லை. உரிய நேரத்தில் அதற்கான கலந்துரையாடல் இடம் பெ றும்-என்றார். (அ)



# முல்லைத்தீவு பிரதேச செயலகங்கள் முன் நேற்று அரச பணியாளர்கள் ஆர்ப்பாட்டம்!

## பொலிஸாரின் செயற்பாட்டைக் கண்டித்து

முல்லைத்தீவு, ஒக. 02

1 மணிநேர பணிப்புறக்கணிப்புடன் கூடிய ஆர்ப்பாட்டம் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள சகல பிரதேச செயலகங்களிலும் நேற்றுக் காலை முன்னெடுக்கப்பட்டது.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் அலுவலகத்தில் இருந்த எரிபொருட்கள் பொலிஸாரால் மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸாரின் செயற்பாட்டுக்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் குறித்த ஆர்ப்பாட்டம் முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு, துணுக்காய் மற்றும் ஒட்டிசுட்டான்,கரந்துறைப்பற்று,புதுக்குடியிருப்பு ,மணலாறு பிரதேச செயலகங்களில் முன் னெடுக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டவர்கள் "ஊடக சுதந்திரத்தை துஷ்பிரயோகம் செய்யாதே" "அலுவலகத்தில் உட்புகுந்து பொருத்தமற்ற முறையில் கையாண்ட சகல தரப்பினருக்கும் எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்" "பொதுமக்களை தவறாக வழி நடத்தாதே" போன்ற சுலோகங்களை ஏந்தியவாறு பிரதேச செயலக வாயில்களில் அமைதியான முறையில் குறித்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் நிர்வாகச் செயற்பாடுகள் எதுவும் இடம்பெற வில்லை என்பதுடன் பொது மக்கள் வெளியிலே காத்திருக்க வேண்டிய சூழ்நிலையும் காணப்பட்டது. (அ)

# வவுனியா பல்கலையில் விரைவில் மருத்துவபீடம்!

## துணைவேந்தர் மங்களேஸ்வரன் தகவல்

வவுனியா, ஒக. 02

**வவுனியா பல்கலைக்கழகத்துக்கு மருத்துவபீடம் ஒன்றை அமைப்பதற்கான திட்டமுன்மொழிவை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்கவுள்ளதாக துணைவேந்தர் ரி.மங்களேஸ்வரன் தெரிவித்தார்.**

வவுனியா பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டு நேற்றுடன் ஒரு வருடம் பூர்த்தியானதை முன்னிட்டு இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வவுனியா வளாகமாக இருந்த எமது நிறுவனம் தனிப்பல்கலைக்கழகமாக தரமுயர்த்தப்பட்டு இன்றுடன் ஒரு வருடம் கடந்துள்ளது. இந்த காலப் பகுதியில் பல்வேறுபட்ட சவால்களுக்கு மத்தியில் பல விடயங்களில் முன்னேற்றம் அடைந்துள்ளோம். அந்த வகையில் நல்லிணக்க மையம் ஒன்றை உருவாக்கியுள்ளோம்.

அத்துடன் சர்வதேசத்தைச் சேர்ந்த மாணவர்களும் இங்கு வந்து கற்கைநெறிகளை பயில்வதற்கான நடவடிக்கையை முன்னெடுத்துள்ளோம். அத்துடன் விசேடதேவைக் குட்டவர்களுக்கான அலகு ஒன்றை ஆரம்பித்து அவ்வாறாக சமூகத்தில் உள்ளவர்களின் பிரச்னைகளை அடையாளம் கண்டு அவர்களுக்கு தேவையான அனுசரணை வழங்கும் செயற்பாடுகளை முன்னெடுத்திருக்கின்றோம்.

அத்துடன் எமது பாரம்பரியத்தையும் கலாசாரத்தையும் அறியும்பொருட்டு கலாசார நூதனசாலை ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மருத்துவ பீடம் ஒன்றை அமைப்பதற்கான முன்மொழிவை எமது மூதவையும் பேரவையும் ஏற்றுக்கொண்டுள்ளது. தற்போது அதற்கான திட்டமுன்மொழிவினை பல்கலைகழக மானியங்கள் ஆணைக் குழுவுக்கு அனுப்பவுள்ளோம்.

இதன் மூலம் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையையும் ஒரு போதனா வைத்தியசாலையாக தரமுயர்த்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம்.

பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழுவால் எமது திட்ட அறிக்கை அங்கீகரிக்கப்பட்டவுடன் அதன் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படும்.

குறிப்பாக எதிர்வரும் சில வருடங்களுக்குள் மருத்துவ பீடத்தை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.

அத்துடன் சூழலியல் பீடம் ஒன்றை உருவாக்குவதற்கும் எமது மூதவையும் பேரவையும் அங்கீகாரம் வழங்கியுள்ளது. அத்துடன் வங்கியியல் காப்புறுதி தொடர்பான புதிய கற்கைநெறி ஒன்றை ஆரம்பிப்பதற்கு மானியங்கள் ஆணைக் குழுஎமக்கு அனுமதி வழங்கியுள்ளது. குறித்த கற்கைநெறிக்கு க.பொ.த உயரதரத்தில் கடந்த வருடத்தில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற மாணவர்களை அனுமதிப்பதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

மானுடவியல் சமூகவியல் என்ற பீடத்தை ஆரம்பிப்பதற்கான முன்மொழிவையும் சமர்ப்பித்துள்ளோம். அதற்கான அனுமதி கிடைத்ததும் அது விரைவில் ஆரம்பிக்கப்படும்.

அத்துடன் நல்லிணக்க மையம் ஒன்றின் ஊடாக பெண்கள் அரசியலில் ஈடுபடும் வகையில் அதனை வலுவூட்டுவதற்கான சான்றிதழ் கற்கைநெறி ஒன்றை ஆரம்பிப்பதற்கு திட்டமிட்டுள்ளோம். இந்த மையத்தின் ஊடாக ஊடகத்துறையில் சான்றிதழ் கற்கைநெறியினை வழங்குவதற்கான அனுமதியும் கிடைத்துள்ளது. அவையும் உடனடியாக ஆரம்பிக்கப்படும். அத்துடன் கடந்த ஒரு வருடத்தில் சர்வதேச மாநாடு ஒன்றை எமது பல்கலைகழகம் நடத்தியுள்ளது.

அத்துடன் எமது பீடங்கள் பல்வேறுபட்ட தொழில்சார் கற்கை நிறுவனங்களுடனும், சமூக அடிப்படையிலான நிறுவனங்களுடனும் உடன் படிக்கைகளை மேற்கொண்டு அவர்களுக்கும் பல்கலைக் கழகத்திற்கும் இடையிலான ஒரு தொடர்பையும் ஏற்படுத்தியுள்ளோம்.

அத்துடன் பொருளாதார நெருக்கடி நிலைமையால் அரசாங்கம் சாதாரண செலவீனங்களை வழங்குவதற்கே உடன் பட்டுள்ளது. நிர்மாணத் துறைகளுக்கான நிதியைத் தராத சூழ்நிலையில் அதனை மேம்படுத்துவதற்காக வெளிநாட்டு நிதி உதவிகளூடாகவும், அரச தனியார் பங்குடமையின் ஊடாகவும் திட்டங்களை மேற்கொள்ளவுள்ளோம்.

அத்துடன் மக்களின் தேவைகளையும் எதிர்பார்ப்புகளையும் பூர்த்தி செய்வதற்காக மக்கள் நலன் தொடர்பான அலகு ஒன்றையும் உருவாக்குவதற்கு திட்டமிட்டுள்ளோம். உயர் கற்கைநெறிகளையும் ஆரம்பிப்பதற்கு தீர்மானித்துள்ளோம். பொருளாதார சிக்கல்கள் ஏனைய சவால்களினால் நாங்கள் திட்டமிட்டவற்றில் குறிப்பிட்ட சிலவற்றை அடையக்கூடியதாக உள்ளது. ஏனைய சவால்களையும் முறியடித்து ஏனைய திட்டமிடல்களையும் சிறப்பாக மேற்கொள்வதற்கு தீர்மானித்துள்ளோம்-என்றார். (அ)

# களு கங்கையின் நீர் மட்டம் உயர்வு

கொழும்பு, ஒக. 02

எதிர்வரும் சில மணித்தியாலங்களில் களுகங்கையின் நீர்மட்டம் அதிகரிக்கக் கூடுமென அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, பெல்மடுல்லை, இரத்தினபுரி, நிவித்திகல, குருவிட்ட மற்றும் அயகம ஆகிய பகுதிகளில் வாழும் மக்கள் இது தொடர்பில் மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் கேட்டுக்கொண்டுள்ளது. (அ)

# இரத்தினபுரி, மாத்தறையில் வெள்ளப்பெருக்கு அபாயம்

கொழும்பு, ஒக. 02

நிலவும் மழையுடன் கூடிய காலநிலையால் நில்வல மற்றும் களு கங்கையை அண்டிய பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்படும் அபாயம் உள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

களுகங்கை பகுதிகளில் கணிசமான மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதால், இரத்தினபுரி மாவட்டத்தின் பெல்மடுல்லை, நிவித்திகல, இரத்தினபுரி, குருவிட்ட, அயகம, அலபத ஆகிய பிரிவுகளிலும் மாத்தறை மாவட்டத்தின் பஸ்கொட, கொட்டபொல, பிடபத்தர ஆகிய பிரிவுகளிலும் மற்றும் அக்குரஸ்ஸ, மாலிம்பட, மாத்தறை, கம்புருப்பிட்டிய, முலட்டியன மற்றும் தெவிநுவர பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் அடுத்த 24 மணித்தியாலங்களில் கணிசமான வெள்ளப்பெருக்கு ஏற்படக்கூடும் என திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக குறித்த பிரதேசங்களில் வசிக்கும் மக்களும் அவ்வழியாக பயணிக்கும் மக்களும் அவதானமாக இருக்குமாறு திணைக்களத்தின் நீர்ப்பாசனப் பணிப்பாளர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (அ)

# நாட்டுக்கு எதிராக சூழ்ச்சி!

## மொட்டுக் கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக. 02

போரால் அடைய முடியாத இலக்கை வேறு வழிகளில் அடைவதற்கான சூழ்ச்சிகள் முன்னெடுக் கப்பட்டுவருவதாகவும், அதற்காக பெருமளவு நிதி வழங்கிவருவதாகவும் அரசின் பிரதான பங்காளிக்கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி நேற்று தெரிவித்தது.

எனவே, தமது உரிமைகளுக்காக போராடும் மக்கள், இந்த சூழ்ச்சி நிகழ்ச்சி நிரல் குறித்தும் விழிப்பாகவே இருக்கவேண்டும் என மொட்டு கட்சியின் செயலாளர் சாகர காரியவசம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர், மக்கள் போராட்டத்தின் பின்னணியில் சூழ்ச்சித் திட்டம் இருப்பதாக சந்தேகம் வெளியிட்டார்.

“இலங்கையை தோல்வி கண்ட நாடாக (பெயில் ஸ்டேட்டட்) மாற்றுவதற்கு சூழ்ச்சி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்நாட்டை பிளவுபடுத்த பாடுபட்ட குழுக்கள், இ தற்காக தற்போது பணங்களை வாரி வழங்கிவருகின்றன. போரால் அடையமுடியாத இலக்கை, வேறு வழியில் அடைய முடியும் என அந்த குழுக்கள் கருதுகின்றன. எனவே, உங்கள் உரிமைகளுக்காக வீதியில் இறங்கி போராடுங்கள், ஆனால் உங்களுடன் இருப்பவர்கள் யாரென்பதையும், அவர்களின் நிகழ்ச்சி நிரல் என்னவென்பதையும் அடையாளம் கண்டு கொள்ள விழிப்பாகவே இருக்குமாறு நாட்டு மக்களிடம் கேட்டுக் கொள்கின்றோம்.

“எனக்கு நேற்று (31) கிடைத்த தகவலொன்றால் நான் அச்சம் அடைந்தேன். கனடாவில் உள்ள நபரொருவரே எனக்கு இந்த தகவலை வழங்கினார். சமூக வலைத்தளங்களில், கோட்டாபய ராஜபக்சவுக்கு எதிராக பதிவொன்றை இட்ட கையோடு, சர்வதேச அமைப்பொன்று அவரை தொடர்பு கொண்டுள்ளது. பிரச்சாரத்தை முன்னெடுக்கவும், நிதி உதவி வழங்க தயார் எனக் கூறப்பட்டுள்ளது.

இப்படி பல சூழ்ச்சிகளுக்கு மத்தியிலேயே அரசை முன்னெடுக்கின்றோம் . நாட்டு பணத்தை எவரும் கொள்ளையடிக்கவில்லை. அந்திய செலாவணி இருப்பை கொள்ளை அடிக்கவும் முடியாது. எனவே, போலி பிரசாரம் முன்னெடுக்கப் படுகின்றது. ” - எனவும் பாராளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் குறிப்பிட்டார். (அ)

# ஜனாதிபதி-கூட்டமைப்பு வெகுவிரைவில் சந்திப்பு!

## பிரதமர் தினேஷ் கூறுகின்றார்

கொழும்பு, ஓக. 02

**“சர்வகட்சி அரசுக்கு ஆதரவு வழங்குமாறு கோரி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அனுப்பியுள்ள கடிதத்துக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சாதகமான பதிலைத் தெரிவித்துள்ள நிலையில், அவர் தலைமையிலான அணியினருடன் ஜனாதிபதி நேரில் பேச்சு நடத்துவார்.”**

-இவ்வாறு பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சர்வகட்சி அரசு தொடர்பில் சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேரில் பேச்சு நடத்துவார். இதன்போது, சர்வகட்சி அரசுக்கு தமிழ்த்



தேசியக் கூட்டமைப்பின் ஒத்துழைப்பு எந்த விதத்தில் அமையும் என்பது தொடர்பில் ஜனாதிபதி கேட்டறிவார்.

தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதான கட்சியாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு திகழ்கின்றது. எனவே, நாட்டின் தேசிய பிரச்னைகளுக்குத் தீர்வுகாணத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒத்துழைப்பும் பங்களிப்பும் இன்றியமையாதது-என்றார். (அ)

# எரிபொருள் பெற வந்தோருக்கு நேற்று குளிர்பானம் விநியோகம்

யாழ்ப்பாணம், ஓக. 02

முகமாலை எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் பெற்றுக்கொள்வதற்காக வரிசையில் நின்றவர்களுக்கு குளிர்பானம் வழங்கப்பட்டது.

எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளரான மயில்வாகனம் ஸ்ரீதாசன் ஏற்பாட்டில் நேற்று குறித்த எரிபொருள் நிரப்பு நிலயத்தில் எரிபொருள் பெற்றுக்கொள்ள வரிசையில்



காத்திருந்தவர்களுக்கு இவ்வாறு குளிர்பானம் வழங்கப்பட்டது.

நண்பகல் வெயிலில் வரிசையில் காத்திருந்த பொது மக்களுக்கு பிஸ்கட் மற்றும் குளிர்பானம் என்பவற்றை எரிபொருள் நிரப்பு நிலையத்தினர் வழங்கினர். (அ)

# ஏழு மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

கொழும்பு, ஓக. 02

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையில் நுவரெலியா உட்பட ஏழு மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இரத்தினபுரி, கண்டி, கேகாலை, காலி, அம்பாந்தோட்டை, மாற்றை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் சில பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கே இவ்வாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ)




# முல்லைத்தீவு மாவட்ட செயலக பணியாளர்களும் போராட்டம்!

## புதுக்குடியிருப்பில் நடந்த அநாகரிகத்துக்கு எதிராக

முல்லைத்தீவு, ஓக. 02

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு பொலிஸார் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு உள்நுழைந்து மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகள் தொடர்பாக விசாரணைகள் இடம்பெற வேண்டும் என தெரிவித்து முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு முன்பாக நேற்று கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

மாவட்ட அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர் உள்ளிட்ட உயர் நிலை அதிகாரிகள் மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் இணைந்து இந்த கவனயீர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்டனர்.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் அத்தியாவசிய தேவைக்காக வரையறுக்கப்பட்ட அளவில் வைக்கப்பட்டிருந்த எரிபொருளை எடுத்துச் சென்றதாகவும் இது பிரதேச செயலாளரையும் அங்குள்ள ஊழியர்களையும் அவமதிக்கும் செயல் எனவும் ஒரு சிலரின் தூண்டுதலின் பேரில் பொலிஸார் இவ்வாறு நடந்து கொண்டிருப்பதாகவும் இது தொடர்பில் பொலிஸ் உயர் மட்டத்தில் முறையிட இருப்பதாகவும் மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்தார். (அ)

# போகரவாவில பகுதியில் வெள்ளத்தில் அடித்துச்செல்லப்பட்ட பெண் மரணம்!

## 4 வயது சிறுமியை காணவில்லை

கொழும்பு, ஜூலை. 02

லக்ஷபான - போகரவாவில பிரதேசத்தில் வெள்ளத்தில் அடித்துச்செல்லப்பட்ட, 60 வயதுடைய பெண்ணொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த பெண்ணும் 4 வயதான அவரது பேரப்பிள்ளையும் ஓடையொன்றை கடக்க முயன்றபோது, இருவரும் வெள்ள நீரால் அடித்துச் செல்லப்பட்டுள்ளனர்.

மேற்படி பெண், சிறுமியை பாடசாலையில் இருந்து வீட்டுக்கு அழைத்துச் செல்லும் போதே இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது. காணாமல்போன சிறுமியை தேடும் பணிகள் தொடர்ந்தும் இடம்பெறுவதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

# வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்ட பாலம் மாணவர்கள், பொதுமக்கள் பெரும் அவதி

கொழும்பு, ஓக. 02

நாவலப்பிட்டி-போகில்ல தோட்டத்தில் உள்ள பாலம் ஒன்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளது.

இதன் காரணமாக பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் என அனைவரும் ஆற்றைக் கடக்க முடியாமல் பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுத்து வருவதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

# ரஷ்யாவில் ஊடக சுதந்திரமும்.. உக்ரைன் மீதான வலிந்த போரும்..

ஐங்கரன் விக்கினேஸ்வரா

பொதுவாகவே எப்போதும் ரஷ்ய விரோதப்போக்கு மேற்கத்திய ஊடக மனோபாவங்களில் பரவி அது உலகெங்கும் முழுமையாய் ஊறிப்போயுள்ளது. அத்துடன் கீழைத்தேச ஊடகங்களிலும் பரவியுள்ளதை காணலாம். ரஷ்யாவில் ஊடக செய்திகளில் கட்டுப்பாடும், உக்ரைன் குறித்த சுயாதீன கருத்துக்களை வெளியிட வேண்டாம் என புட்டினின் அரசு தெரிவித்ததாக மேற்கத்திய ஊடகங்கள் கடந்த மார்ச்சிலிருந்து குற்றம் சாட்டி வருகின்றன.

இக் குற்றச்சாட்டுக்களில் எத்தகைய உண்மையும், நியாயமும் உள்ளது என்பதை அலசுவதே இக்கட்டுரை.

உண்மையில் இதனைப்பற்றி ரஷ்ய ஊடகங்களை வாசித்துப் புரிபவர்களுக்கு உண்மை புரியும். ஏனெனில் ரஷ்யாவில் உள்ள ஊடகங்களில் உக்ரைன் போர் குறித்த மேற்கத்தைய தகவல்களை உறுதிப்படுத்தாமல் வெளியிட வேண்டாம் என்றே ரஷ்ய அரசு கூறியுள்ளது. அதனையும் மீறி பல ரஷ்ய நாளிதழ்கள் அமெரிக்க சார்பான தகவல்களை இன்னமும் வெளியிட்டு வருவதை காணக் கூடியதாக உள்ளது.

ஆயினும் ரஷ்யாவில் ஊடக செய்திகளில் கட்டுப்பாடு இருப்பினும், உக்ரைன் குறித்த கருத்துக்களும், சுயாதீன செய்திகளும் ரஷ்ய ஊடகங்களில் தொடர்ந்து வெளிவந்த வண்ணமே உள்ளன.

**மேற்கத்திய ஊடகங்களின் ரஷ்ய விரோதப்போக்கு:**

பொதுவாகவே எப்போதும் ரஷ்ய விரோதப்போக்கு மேற்கத்திய ஊடக மனோபாவங்களில் ஊறி அது பரவி முழுமையாய் ஊறிப்போயுள்ளது. அது உலகம் முழுதுமே ஊடகங்களில் தொற்றிப் பரவியுள்ளது.

அது மாத்திரமன்றி அமெரிக்கா ஏதோ உலகிற்கு விடுதலை வாங்கித்தர வந்த மீட்பர்கள் போலவும் மேற்கத்திய ஊடகங்களும் தொடர்ந்து பல ஆண்டுகளாக பிரச்சாரம் செய்து வருவதையும் பார்க்கிறோம்.

ஏன் இந்தப் போர் என்பது, எங்கிருந்து இவை தோன்றின என்பதும் தெரிந்து கொள்ள வேண்டிய ஒன்றாகும். எந்தப் போர் என்றாலும் அது அநாகரிக காட்டுமிராண்டித்தனமானது, இன்றைய உலகம் போருக்கான உலகம் அல்ல. கொரோனா தாக்கத்தின் பின்னரான பொருளாதார சீரழிவிலிருந்து மீள முடியாமல் தனிமனிதர்களும் குடும்பங்களும் ஏழை நாடுகளும் தத்தளித்து வரும் நிலையில் போர் என்பது பெரும் கொடுமை என்பதே உண்மையாகும்.

ஆயினும் ரஷ்யாவின் பிராந்திய தொலைக்காட்சி சேனல் ரெயின் டிவி உக்ரைன் மீதான மாஸ்கோவின் படையெடுப்பு பற்றிய தகவல்களைக் கூறியமையால், பிராந்திய அதிகாரிகளின் நடவடிக்கைகள் மூலம் உத்தரவிட்டதை அடுத்து, அதன் செயல்பாடுகளை இடைநிறுத்தியுள்ளது. முக்கியமாக இந்த தொலைக்காட்சி சேனல் நேரடி ஒளிபரப்பு நடத்திய ஊழியர் ஒருவர் அதனுடைய கடைசி நிமிடங்களில் போர் வேண்டாம் நிறுத்தலாம் என்பது போல் வார்த்தைகளை உபயோகித்தமையால் இதுபோன்று தடை உத்தரவு வந்தது.

ரஷ்யாவில் உள்ள பல்வேறு ஊடகங்களுக்கு குறிப்பாக தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மற்றும் நேரடி காட்சிகள் போன்றவற்றிற்கு ரஷ்ய இறையாண்மையை மதிக்காத குற்றத்தால் இக்கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. இதன்பின் ரஷ்யாவின் ஊடகங்களில் ஒன்றான ரெயின் டிவி சேனல் தற்காலிக பணியை நிறுத்துவதாக அறிவித்தது.

**உலக பத்திரிகை சுதந்திரம்:**

உக்ரேனிய போர் தீவிரமடைந்த மே மாதத்தில் உலக பத்திரிகை சுதந்திர தினத்தை முன்னிட்டு ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டேரஸ் விடுத்துள்ள அறிக்கையில் "பத்திரிகை சுதந்திரம் இல்லாமல், உண்மையான ஜனநாயக சமூகங்கள் இல்லை. எனினும் பல பக்கங்களில் இருந்து அவர்களை மௌனப்படுத்தும் முயற்சிகளை எதிர்கொள்கின்றனர் எனக் கூறியுள்ளார்.

உக்ரேனிய போரின் பின்னர் அதிகாரப்பூர்வ ஆதாரங்கள் வழங்கிய தகவல்களை மட்டுமே வெளியிடுமாறு ரஷ்ய ஊடகங்களுக்கு அறிவுறுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. தாக்குதல், படையெடுப்பு, போர் போன்ற வார்த்தைகளை உக்ரைன் நெருக்கடியை விவரித்து காட்ட ஊடக நிறுவனங்களும் தடை செய்யப்பட்டுள்ளன என்றும் ரஷ்ய செய்தி இணைய தளமான மெடுசா தெரிவித்துள்ளது.

ரஷ்யாவின் சுதந்திர செய்தி நிறுவனங்களில் ஒன்றான லிபரல் சேனலின் பத்திரிகையாளர்கள் அமைதிக்கான நிலைப்பாட்டை எடுக்க முடிவு செய்தனர். சேனலின் நிறுவனர்களில் ஒருவரான நடாலியா சிந்தேவா என்பவர், "போர் வேண்டாம்" என்று ஊழியர்கள் ஸ்டுடியோவில் இருந்து வெளிநடப்பு செய்தனர். ஆயினும்




அவர்கள் மீது எந்த தடை உத்தரவும் வரவில்லை.

**அதிகார பூர்வமான தகவல்:**

ரஷ்யாவில் உள்ள செய்தி நிறுவனங்கள் அரசின் அதிகார பூர்வமான தகவல்களை தவிர வேறு எந்த தகவல்களையும் வெளியிடக் கூடாது என கட்டுப்பாடு விதிக்கப் பட்டுள்ளது என்றும் மேற்கத்திய ஊடகங்கள் குற்றம் சாட்டி வருகின்றன.

ரஷ்யாவின் தொலைத் தொடர்பு ஒழுங்குமுறை காரணமாக சர்வதேச தொலைக்காட்சி நிலையங்களின் ஊழியர்கள்சிலர்தங்கள்சொந்த பாதுகாப்புக்கு பயந்து நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர் என்பதும் உண்மையே.

உக்ரைன் மீதான போரைத் தொடர்ந்து பல்வேறு தரப்பிலிருந்து எதிர்ப்புகளும், கண்டனங்களும் கிளம்பியுள்ளன.

ரஷ்ய ராணுவ நடவடிக்கையை பற்றி தவறாக சித்தரித்தால் 15 ஆண்டுகள் சிறை என புட்டினின் அரசு சட்டம் இயற்றி உள்ளதாகவும் மேற்கத்திய ஊடகங்களில் குற்றஞ்சாட்டப்பட்டது.

**ரஷ்யாவின் உள்ளூர் ஊடகங்களில்**

உக்ரைன் மீதான ரஷ்ய ராணுவ நடவடிக்கையை தவறாக சித்தரித்தால் 15 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்க வழிவகை செய்யும், மசோதாவுக்கு ரஷ்ய நாடாளுமன்றம் ஒருமனதாக ஒப்புதல் வழங்கியுள்ளது.

அத்துடன் அதிபர் புட்டின் ஒப்புதலுடன் உடனடியாக சட்டம் அமலுக்கு வந்துள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தருணத்தில் உக்ரைன் மீதான ரஷ்ய ராணுவ



நடவடிக்கையால் அப்பாவி பொதுமக்கள் உயிருக்கு குந்தகம் விளைவித்து போர்க் குற்றம் புரிந்துவருவதாக ரஷ்யாவின் மீது உக்ரைன் சர்வதேச நீதிமன்றத்தில் முறையிட்டுள்ளதும் அறிந்ததே.

மேலும் உக்ரேனிய, மேற்கத்திய ஊடகச் செய்திகளிலும் ரஷ்ய தாக்குதலால் பெரும் மனிதாபிமான நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியிட்டு வருகின்றனர்.

**உக்ரைன் மீதான போரும் - மேற்கத்திய ஊடகங்களும்:**

சோவியத் யூனியன் சிதைந்த பிறகு, முன்னைய ரஷ்ய அதிபர் பொறிஷ் யெல்சின் காலத்தில் மேற்கத்திய உலகம் மகிழ்ச்சியடைந்தது மாத்திரமன்றி, அமெரிக்கர்கள் எந்த எதிர்ப்பும் இல்லாமல் ரஷ்யாவுக்கு எதிரான செயல்களை செய்ய முடிந்ததும் உண்மையே.

உலகை உலுக்கிய செப்டம்பர் 11, 2001 அன்று அமெரிக்க நிதி நிறுவனங்கள் மீதான தாக்குதலுக்குப் பிறகு, அப்போதைய அதிபர் புஷ், ஆப்கானிஸ்தான் மீது படையெடுத்தார். ஒருபோதும் கண்டுபிடிக்க முடியாத 'பேரழிவு ஆயுதங்கள்' என்ற போலிக்காரணத்தின் கீழ் அமெரிக்கர்கள் ஈராக்கில் தலையிட்டனர். அவர்கள் தலைமையை குறிவைத்து, சதாம் ஹூசைனையும், பின்னர் லிபியாவில் கடாபியையும் கைது செய்து, அவர்களின் ஊடக கையாளுதல்கள் மூலம் அவர்களை மிக மோசமான மனிதர்களாக உலகிற்குக் காட்டினார்கள்.

ரஷ்யர்கள் உக்ரைனை ஆக்கிரமித்த போதும், இஸ்ரேல் அதன் அண்டை நாடுகளான சிரியா மற்றும் லெபனான் போன்ற நாடுகளின் வான்வெளிகளை அத்துமீறி, அப்பாவி மக்கள் மீது குண்டுவீசியும் வருகின்றனர். அத்துடன் சவூதி அரேபியரும் யேமனில் குண்டு வீச்சைத் தொடர்கின்றனர். இவை பற்றியும் எந்த கேள்வியையும் ஐ.நா கேள்வி எழுப்ப முடியா கையாலாக அமைப்பாக வீழ்ச்சியடைந்து விட்டது, காரணம் ஐநா அமெரிக்கவின் கைப்பொம்மையாக, அமெரிக்க நிதியை நம்பியிருப்பதே காரணமாகும்.

**ஊடக சுதந்திர அச்சுறுத்தல்:**

உலக பத்திரிகை சுதந்திர தினத்தை முன்னிட்டு ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டேரஸ் கடந்த மே மாதம் விடுத்துள்ள அறிக்கையில் ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக ஊழியர்களின் சுதந்திரத்திற்கான அச்சுறுத்தல்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. போர் வலயங்களில் உள்ள ஊடகவியலாளர்கள் குண்டுகள் மற்றும் தோட்டாக்களால் மட்டும் அச்சுறுத்தப்படுவதில்லை. ஆனால் நவீன யுத்தத்துடன் வரும் பொய்மைப் படுத்தல் மற்றும் தவறான தகவல்களின் ஆயுதங்களால் அச்சுறுத்தப்படுகிறார்கள். சாதாரணமாக தங்கள் பணிகளை செய்ததற்காக அவர்கள் எதிரியாக தாக்கப்படலாம், உளவு பார்த்ததாக குற்றம் சாட்டப்படலாம், தடுத்து வைக்கப்படலாம் அல்லது கொல்லப்படலாம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

**ரஷ்ய அரசு ஊடகங்கள்:**

ரஷ்ய அரசு ஊடகங்கள் உக்ரைன் மீதான தாக்குதலை படையெடுப்பு , போர் என்றெல்லாம் குறிப்பிடாமல் சிறப்பு ராணுவ நடவடிக்கை என்றே குறிப்பிட்டு வருகின்றன.

ஆனால் பல சர்வதேச, மேற்கத்தய ஊடகங்கள் அனைத்தும் ரஷ்ய படையெடுப்பு என்றே குறிப்பிட்டு வருகின்றன.

ரஷ்யாவின் ஊடக கட்டுப்பாடு சட்டத்தின் நோக்கம் ரஷ்ய வீரர்களையும், ரஷ்ய ராணுவ மேலாண்மையை பாதுகாப்பதற்கு மட்டுமே என்று ரஷ்ய நாடாளுமன்றம் தெரிவித்துள்ளது.

சில ரஷ்ய ஊடகங்கள் இதனை மிகக் கடுமையான கருத்துச் சுதந்திர தடையாக பார்க்கின்றன.

இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டதும் ரஷ்யாவின் நோவயா கஸியட்டா செய்தித்தாளின் ஆசிரியர் டிமிட்ரி முரடோவ், இவரே கடந்த ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசைப் பெற்றவர், தங்கள் செய்தித்தாளில் இனி உக்ரைன் மீதான ரஷ்ய ராணுவ நடவடிக்கை பற்றிய செய்திகள் வராது என்றும் அறிவித்தார்.

**பிபிசி தற்காலிக நிறுத்தம் :**

பிபிசி செய்தி நிறுவனம் ரஷ்யாவில் இயங்குவதை தற்காலிகமாக நிறுத்துவதாகவும் அறிவித்துள்ளது. ரஷ்யாவுக்கு வெளியிலிருந்து ரஷ்ய செய்திகளை வழங்குவோம் என்றும், ஊழியர்களின் பாதுகாப்பு முக்கியம் என அறிவித்துள்ளது. ஊடக கடமையைச் செய்வதற்காக அவர்கள் ரஷ்யாவில் குற்றவியல் நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படுவதை விரும்பவில்லை என்று பிபிசி அறிவித்துள்ளது.

ரஷ்யாவில் ஊடகப் பணி பாதிக்கப்பட்டுள்ளதால் வாய்ஸ் ஆஃப் அமெரிக்கா , ரேடியோ ஃப்ரீ, யூரோப் ரேடியோ , லிபர்டி, ஜேர்மனிய டட்ஷே வெல், மெடுசா ஆகிய ஊடகங்கள் தங்கள் நடவடிக்கையை இடை நிறுத்தி கொள்வதாகவும் தெரிவித்துள்ளனர்.

# அடுத்த கட்டம்: 'அரகலய'வுக்கு ஆப்படித்தல்

- தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ



இலங்கை, இன்று ஒரு முட்டுச்சந்தில் நிற்கிறது. புதிய ஜனாதிபதியின் வருகை எதையுமே மாற்றிவிடப் போவதுமில்லை. இலங்கையில் ஜனநாயகம் மலரப்போவதும் இல்லை.

முன்னெவரையும் விட, மிக மோசமான சர்வாதிகாரியாகத் தன்னால் இயங்கவியலும் என்பதை, ரணில் விக்கிரமசிங்க பதவியேற்ற 24 மணி நேரத்துக்குள் நிரூபித்துள்ளார். ரணில் மீதான, 'மீட்பர்', 'ஜனநாயகத்தின் காவலர்' போன்ற விம்பங்கள் உடைந்து, சுக்குநூறானது நல்லது. இருந்தாலும் இன்னமும் அதைத் தாங்கி நிற்போர் உண்டு.

வரலாறு காணாத மக்கள் எழுச்சியொன்றை இலங்கை கண்டுள்ளது. இது அதிகார பீடங்களை அசைத்துள்ளது. மக்கள் எழுச்சி குறித்த நம்பிக்கைகளை விதைத்துள்ளது. மக்களால் அதிகாரத்தில் உள்ளவர்களை அகற்றவியலும் என்பதை, இந்த 'அரகலய' செய்து காட்டியுள்ளது.

இது ஆபத்தானது என்று அதிகார வர்க்கம் அறியும், அரசியல்வாதிகள் அறிவார்கள். இவர்கள் இருவரையும் நம்பியுள்ள ஏவல் வர்க்கமும் அறியும், இவர்கள் எல்லோரையும் ஆட்டுவிக்கும் 'சர்வதேச சமூகமும்' அறியும்.

எனவே, போராட்டத்தை மழுங்கடித்தலும் சேறுபூசலும் அவதூறுபரப்புதலும் அவசியமாகிறது. அதன்மூலமே, போராட்டத்தை வலுவிழக்கவும் நம்பிக்கை இழக்கவும் செய்ய முடியும்.

அதற்கான கட்டமே, இப்போது அரங்கேறுகிறது. இந்தப் போராட்டத்தையும் அதுசார்ந்து உருவாகியுள்ள உரையாடல்களையும், அவசரமாக முடிவுக்குக் கொண்டுவரவேண்டும் என்பதே அதிகாரவர்க்கத்தின் விருப்பமாகும்.

இதில், ஆளும் எதிர்க்கட்சி, ரணில் ஆதரவு, ரணில் எதிர்ப்பு, கோட்டா ஆதரவு என்ற எந்த வேறுபாடும் இன்றி, அதிகாரவர்க்கத்தினர் ஒன்றுபட்டு உள்ளனர்.

மூன்று அடிப்படையான தேவைகளுக்காக, இந்தப் போராட்டத்துக்கு முடிவு கட்டவேண்டும் என்று அதிகாரத்தில் உள்ளோர் விரும்புகிறார்கள்.

முதலாவது, அதிகாரவர்க்கம் சவாலுக்கு உள்ளாவதை எப்போதும் விரும்புவதில்லை. தன்னைச் சவாலுக்கு உட்படுத்துவோரை, எப்படியும் பழிவாங்கியே தீருவது என்பது அதிகாரத்தின் குணம்.

இலங்கையில், கடந்த மூன்று மாதங்களாக நடைபெற்ற விடயங்கள், அதிகாரவர்க்கத்தின் நலன்களுக்கு எதிரானவை. இப்போராட்டங்கள் தொடருமிடத்து, அதிகாரத்தின் இருப்பே கேள்விக்கு உள்ளாகும்.

இதனால், 'அரகலய'வைச் சரிக்கட்டுவது தவிர்க்கவியலாதது.

எல்லாவற்றிலும் மேலாக, இன்னுமொருமுறை இவ்வாறானதொரு போராட்டத்தை, இலங்கையர்கள் தொடங்காமல் இருக்க வேண்டும் என்பதை உறுதி செய்ய வேண்டும். அதற்கு, இவர்களுக்குப் 'பாடம் புகட்ட வேண்டும்' இதுதான் அதிகார வர்க்கத்தின் மனநிலை.

இரண்டாவது, இலங்கையின் அண்மைக்கால மாற்றங்கள், புதிதாக ஏற்படுகின்ற அரசாங்கம், போராட்டக்காரர்களுடன் பேசவேண்டியதன் தேவையை உருவாக்கியது. இதன்மூலம் அரசாங்கமும் பாராளுமன்ற உறுப்பினர்களும் போராட்டக்காரர்களுக்கும் மக்களுக்கும் பதில்சொல்லக் கடப்பாடு உடையவர்களாகினார்கள். இது அதிகாரத்துக்கு உவப்பானதல்ல.

இந்த நிலையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவே, பாராளுமன்றின் உயர்தன்மை பற்றிப் பேசி, அதிகாரத்தை அவர்கள் தமக்குள் பகிர்ந்து கொண்டார்கள். அரசாங்கமோ பாராளுமன்றோ, தமது செயல்களுக்குப் பொறுப்புச் சொல்லும் ஓர் ஏற்பாட்டை விரும்பவில்லை. இதனால், ஏதாவதொரு வழியில் போராட்டக்காரர்களை வீட்டுக்கு அனுப்புவது தவிர்க்க இயலாததாகும்.

இல்லாவிட்டால் விரும்பியோ - விரும்பாமலோ, போராட்டக்காரர்களுடன் பேச வேண்டியிருக்கும். இதை எப்படியாவது இல்லாமல் செய்துவிட, அதிகாரவர்க்கம் துடிக்கிறது. சட்டரீதியாகவும் சட்டத்துக்கு முரணாகவும் அதிகாரவர்க்கம் இதைச் செய்து முடிக்கும். இதை அடுத்த சிலவாரங்கள் நிகழவுள்ள காட்சிகள் உறுதிப்படுத்தும்.

மூன்றாவது, சர்வதேச நாணய நிதியத்தின் கடனை பெற்றுக் கொள்வதாயின் இலங்கை ஏராளமான கட்டமைப்பு மாற்றங்களைச் செய்தாக வேண்டும். இக்கட்டமைப்பு மாற்றங்கள் இலங்கையில் எஞ்சியிருக்கின்ற சமூகப் பாதுகாப்பையும் இல்லாதொழிக்கவல்லவை.

இலவசக் கல்வி, இலவச மருத்துவம் உள்ளிட்ட சமூகநலத் திட்டங்களை இல்லாதொழித்து, தனியார்மயத்தை ஊக்குவித்து, அரசதுறையை புனர்நிர்மாணம் செய்வதன் பெயரால் வேலையிழப்புகள் என அனைத்தையும் செய்வதன் ஊடே, சர்வதேச நாணய நிதியத்தை நாட முடியும்.

வலுவான மக்கள் போராட்டம் உயிர்ப்புடன் இருக்கும்வரை இது சாத்தியமில்லை. ஏனெனில் மக்கள் இதை எதிர்ப்பார்கள். எனவே, 'அரகலய'வை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும்.

சர்வதேச நாணய நிதியம் கோருகின்ற 'அரசியல் ஸ்திரத்தன்மை' என்பது, போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவந்து, கட்டமைப்பு மாற்றங்களை எதுவித எதிர்ப்பும் இன்றி நடைமுறைப்படுத்தத் தேவையான சூழலாகும்.

அதாவது, சர்வதேச நாணய நிதியமும் மேற்குலகமும் கோருகின்ற ஸ்திரத்தன்மை என்பதன் பொருள், போராட்டக்காரர்களை வீட்டுக்கு அனுப்புவதும் மக்கள் எதிர்ப்பேதும் தெரிவிக்காமல் அமைதிகாப்பதை உறுதிப்படுத்துவதுமே ஆகும்.

இன்று, மூன்று போக்குகளையும் காணக்கிடைக்கிறது. முதலாவது, அரச ஊழியர்கள் (பொலிஸார், இராணுவத்தினர், ஏனையோர்) சட்டத்தை நிலைநாட்டுவது என்பதன் போர்வையில், மக்களுக்கு எதிரான வன்முறையைப் பயன்படுத்துகிறார்கள்.

ஒருவாரத்துக்கு முன்னர் வரை போராட்டக்காரர்களுக்கு ஆதரவாக இருந்தவர்கள் எல்லாம், இன்று சட்டம்-ஒழுங்கு பற்றி வகுப்பெடுக்கிறார்கள்.

இந்த மாற்றம் என்பது, கோட்டாவை வீட்டுக்கு அனுப்பப் போராடியபோது, இளைஞர்கள் வீரர்களாகவும் நாயகர்களாகவும் தெரிந்தார்கள். இன்று அவர்கள் பயங்கரவாதிகளாகத் தெரிகிறார்கள். இதே குரலே பாராளுமன்றிலும் ஒலிக்கிறது.

இரண்டாவது போக்கு, அதிகார வர்க்கத்தினர் இன்று வெளிப்படையாகவே வன்முறையை ஆதரிக்கிறார்கள். போராட்டக்காரர்கள் மீது வன்முறை ஏவப்படுவதை நியாயப்படுத்துவதோடு அது தேவையானது என்றும் முன்மொழிகிறார்கள்.

இவ்வாறு கோருபவர்கள் தங்கள் வாழ்நாளில் வன்முறைக்கு ஆளாகாதவர்கள். இலங்கைச் சமூகம் எவ்வாறு ஒரு வன்முறைச் சமூகமாக மாறியிருக்கிறது என்பதும் மூன்று தசாப்தகால யுத்தம் வன்முறைக்கும் காணாமலாக்கப்படுதலுக்கும் சித்திரவதைக்கும் மௌன அங்கிகாரத்தை வழங்கியுள்ளது என்பதும் கவனிக்கத்தக்கது.

மூன்றாவது, கடந்தவாரம் போராட்டக்காரர்கள் மீது ஏவப்பட்ட வன்முறையைப் பார்த்து, பலர் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

அரசாங்கத்தின் செயலைக் கண்டித்துள்ளனர். இவர்கள் கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேலாக, சிறு பான்மையினர் மீது வன்முறை தொடர்ச்சியாக ஏவப்பட்டபோது, கண்டும் காணாமல் இருந்தவர்கள்.

இவ்வாறானதொரு செயலை இலங்கை அரசாங்கம் செய்வது, வெட்கக்கேடானது என்றும் இவை சர்வதேச அரங்கில் இலங்கையின் நற்பெயருக்குக் களங்கம் விளைவிக்கும் என்றும் அறிக்கைகளையும் கருத்துகளையும் வெளியிட்டுள்ளனர்.

இன்றுவரை, 'அரச பயங்கரவாதம்' என்ற சொற்பதத்தைக் கவனமாகத் தவிர்ப்பவர்களே இவர்கள் தான். இப்போதைய கூற்றுகள் எழுப்புகிற கேள்வியாதெனில், நீண்டதுயிலில் இருந்து இப்போதுதான் இவர்கள் எழுந்தார்களா அல்லது, இது தெரிந்தெடுத்த மறதியா?

இலங்கை புதியதொரு திசைவழியில் பயணிப்பதற்கான வாய்ப்பை இன்னொரு முறை தவறவிடுகிறது என்றே தோன்றுகிறது. இலங்கையைப் பீடித்துள்ள சிங்கள - பௌத்த பேரினவாதமும் அதி கார துஷ்பிரயோகமும் ஊழலும், இலங்கையின் முன்னேற்றகரமான பாதைக்குத் தொடர்ந்து குழி பறிக்கின்றன.

மேற்சொன்ன மூன்று போக்குகளுக்குமான அடிப்படை என்ன? மக்களின் நீண்ட போராட்டத்தின் பின்னரும் இவ்வாறான குறுந்தேசியவாத நிலைப்பாடுகள் ஏன் முனைப்படைகின்றன என்பது, ஆழ விசாரிக்கப்பட வேண்டியவை. இவை, ஆழ விசாரிக்கப்படாமல் இலங்கை ஒரு நாடாக முன்செல்ல வியலாது.

இலங்கையர்கள் ஒரு சமூகமாகத் தங்களுக்குள் சில கேள்விகளைக் கேட்டாக வேண்டும். இந்தப் போராட்டத்தின் வெற்றிக்கு உரிமையுடையவர்கள் அரசியல்வாதிகள் அல்லர். தொடர்ச்சியான வன்முறைக்கும் துன்பத்துக்கும் ஆளாகியும் தொடர்ச்சியாகக் களத்தில் நின்ற இளைஞர்களே ஆவார்.

அவர்களின் தியாகமே இதை சாத்தியமாக்கியது.

அவர்கள் தங்களுக்காக மட்டும் போராடவில்லை. நம் அனைவருக்காகவும் நமது எதிர்காலத்துக்காகவுமே போராடினார்கள்.... போராடுகிறார்கள்.... இன்று நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கும் அவர்களை, நாம் பாதுகாக்கப் போகிறோமா அல்லது நாம் உண்டு நமது வேலையுண்டு என்று இருக்கப் போகிறோமா?

மக்களால் தெரிந்து பாராளுமன்றுக்கு அனுப்பப்பட்டோர், தொடர்ந்தும் மக்கள் விரோதமாக இயங்குவதை அனுமதிப்பதா? நாங்கள் அனுப்பிய பாராளுமன்ற உறுப்பினர்கள் பற்றிய எமது நிலைப்பாடு என்ன? எப்போது நாம், அவர்களை கேள்வி கேட்கப் போகிறோம்? அவர்களைத் தொடர்ந்தும் தெரிவுசெய்து, எமது குழந்தைகளின் எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக்கப் போகிறோமா?

இந்த நெருக்கடியிலும் பெற்றோல், டீசல் மாபியாக்களும் மிகப்பெரிய கறுப்புச் சந்தையும் உருவாகியிருக்கிறது. இதை நாம் எவ்வாறு அனுமதித்தோம்? ஏன் கேள்வி கேட்க மறுத்தோம்? நெருக்கடியிலும் சமூகப் பொறுப்பின்றி சுயநலமாக இயங்கும் ஒரு சமூகம் விடிவுக்கு தகுதியானதா?

'அரகலய' தொடங்கியது முதல், நான் வலியுறுத்தியவற்றில் ஒன்று நியாயத்துக்கும் உரிமைக்கும் நீதிக்குமான போராட்டத்தில் ஒருகணம் கண்ணயர்ந்தாலும் பாசிசம் எனும் கொடுந்தண்டனை எம்மை வந்து சேரும் என்பதாகும். நாம் கண்ணயர்ந்தோமா இல்லையா என்பதை, அடுத்து இலங்கையில் அரங்கேறும் காட்சிகள் கோடுகாட்டும்.

# புலமைச் சிகரம் | தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

**06) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் உள்ள சரியான எழுத்துக்கூட்டல் உள்ள சொல்லை அடைப்புக் குறியினுள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

i) நான் ........................................ (ஆவணி, ஆவனி) மாதம் பிறந்தேன்.

ii) தேசியக்கொடியில் .................................. (வால், வாழ், வாள்) ஏந்திய சிங்கம் ஒன்று உண்டு.

ii) நாங்கள் .................................................. (சுற்றுலா, சுற்றுளா, சுற்றுழா) விற்காகக் கண்டிக்குச் சென்றோம்.

(3 புள்ளிகள்)

**07) பின்வரும் பழமொழிகளைப் பூர்த்தி செய்க.**

i) ஆற்றிலே போட்டாலும் ........................................................................

ii) ..................................................... குறுகுறுக்கும். (2 புள்ளிகள்)

**08) கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தைப் பூரணப்படுத்துக.**

i) பலா கன்று போல பயிர் : ...........................................................

ii) தென்னை ஓலை போல மூங்கில் : .................................................. (2 புள்ளிகள்)

**09) பின்வரும் வாக்கியத்திற்குரிய இரட்டைக்கிளவியை இட்டு பூரணப்படுத்துக.**

i) தம்பி தண்ணீரை ............................... (கட கட, மட மட) வெனக் குடித்தான்.

ii) காலையில் சூரியன் ................................ (தகதக, குளுகுளு) வென பிரகாசித்தது.

(2 புள்ளிகள்)

**10) தனிச்சொல்லை எழுதுக.**


i) வீண் செலவு செய்பவன் : ..................................................................


ii) விமானத்தைச் செலுத்துபவன் : ..................................................... (2 புள்ளிகள்)

**11) கீழே தரப்பட்ட ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.**

i) Bread : ........................... ii) Cloud : ............................ (2 புள்ளிகள்)

**12) தரப்பட்ட ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களிலே எழுதுக.**

i)  ..................................

ii)  ..................................

(2 புள்ளிகள்)

**13) பின்வரும் ஆங்கிலச் சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியம் அமைக்குக.**

i) do / like? / What / you : ............................................................................

ii) old / How / you? / are : ........................................................................................ (2 புள்ளிகள்)

**14) பின்வரும் சிங்களச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.**

i) ரோஹல : ............................................................

ii) தொளஹ : ....................................................... (02 புள்ளிகள்)

**15) பின்வரும் வாக்கியங்கள் சிங்களத்தில் கூறப்படும் விதத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.**

i) சோறு சாப்பிடுங்கள் : ...................................................................................

ii) அங்கே பாருங்கள் : ................................................................................... (02 புள்ளிகள்)

❖ **விடை எழுதுக.**

**16)**

| | |
|---|---|
| 7 | 8 |
| 3 | 0 |

இந்த நான்கு எண்ணட்டைகளாலும் உருவாக்கக்கூடிய மிகப் பெரிய எண்ணை எழுதுக.

............................................................

**17)** ஏழாயிரத்து முந்நூற்று ஒன்பது என்ற எண்ணை நியம முறையில் இலக்கத்தில் எழுதுக.

..............................................................................

## விடைகள்

| | | | |
|---|---|---|---|
| **06.** | 1) ஆவணி | 2) வாள் | 3) சுற்றுலா |
| **07.** | 1) அளவறிந்து போடு | 2) குற்றமுள்ள நெஞ்சு | |
| **08.** | 1) நாற்று | 2) தாள் | |
| **09.** | 1) மடமட | 2) தக தக | |
| **10.** | 1) ஊதாரி | 2) விமானி / வலவன் | |
| **11.** | 1) பாண் | 2) முகில் | |
| **12.** | 1) Star | 2) Table | |
| **13.** | 1) What do you like? | 2) How old are you? | |
| **14.** | 1) வைத்தியசாலை | 2) பன்னிரண்டு | |
| **15.** | 1) பத் கன்ன | 2) எத்தன பலன்ன / எஹே பலன்ன /அத்தன பலன்ன | |
| **16.** | 8 730 | **17.** 7 309 | |

---

**கல்வி tv CHANNEL-1**

**02.07.2022**
**செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

**கல்வி tv CHANNEL - 2**

**02.07.2022**
**செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# மூன்று வீடுகளில் திருட்டு சந்தேகநபர் கைதானார்!

மட்டக்களப்பு, ஒக. 02

மட்டக்களப்பு - வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் ஓட்டமாவடி பிரதேசத்தில் உள்ள 3 வீடுகளை உடைத்து தங்க நகை மற்றும் பணத்தை களவு எடுத்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வாழைச்சேனை நாவலடியைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளது. களவாடப்பட்ட பொருட்களை மீட்டுள்ளனர்.

இந்தப் பிரதேசத்தில் சந்தை வீதியிலுள்ள வீடு ஒன்றிலும், பி.எச் குறுக்கு வீதியிலுள்ள வீடு ஒன்று உட்பட 3 வீடுகளில் கடந்த 26ம் திகதி அதிகாலை வீடுடைத்து 4 பவுண் நகைகள், 2 இலட்சம் ரூபாய் பணம் என்பன திருடப்பட்டன.

இது தொடர்பாக வாழைச்சேனை பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸார் மேற்கொண்டு வந்துள்ளனர்.

இந்நிலையில் சந்தேகநபர் களவாடிய தங்க நகைகளை தனியார் நிறுவனம் ஒன்றில் அடகு வைக்க முயன்றபோது கைது செய்யப்பட்டார்.

கைதானவர் வாழைச்சேனை நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்டார். அவரை 14 நாட்கள் மறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

(ஐ)

# மகிந்த தரப்பினருடன் இன்னமும் சாணக்கியன் தொடர்பிலுள்ளார்!

## சுமந்திரன் எம். பி.



காரைதீவு, ஒக. 02

மகிந்தபக்கத்தில் இன்னும் தொடர்புகளை சாணக்கியன் எம்.பி பேணி வருகின்றார் என்று எம். ஏ. சுமந்திரன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

பொருளாதார நெருக்கடியும் சமகால அரசியலும் எனும் கருப் பொருளில் தமிழ் தேசிய கூட்டமைப்பினரின் மக்கள் தெளிவுபடுத்தும் கலந்துரையாடல் நடக்கிறது.

நேற்று முன்தினம் அம்பாறை - காரைதீவு கலாசார மண்டபத்தில் நடந்த நிகழ்விலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், நாட்டில் என்ன நடக்கிறது என்பது மக்களுக்கு தெரியும். நாட்டில் போராட்டம் ஆரம்பமானபோது ராஜபக்ஷ குடும்பத்தில் ஒருவர் கூறினாரென சாணக்கியனுக்கும் எனக்கும் ஒரு செய்தி வந்தது. அவர் என்ன கூறினார்.

அதாவது இந்த போராட்டத்தை கட்டுப்படுத்த முடியாவிட்டால் எம்மிடம் ஒரு திட்டம் உள்ளதாக எமக்கு தெரிவித்தார். அந்த திட்டமானது ரணில் விக்கிரமசிங்கவிடம் பதவியை வழங்குவோம். அவர் அதைப் பத்திரமாக வைத்திருந்து எம்மிடம் திருப்பி தருவார். இந்த விடயம் மகிந்த ராஜபக்ஷ இராஜினாமா செய்வதற்கு 3 கிழமைக்குள் எமக்கு கிடைத்த தகவல் ஆகும்.

சாணக்கியனுக்கு தான் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது. சாணக்கியனே எனக்கு சொன்னார். அவருக்கு (சாணக்கியன்) அந்த பக்கத்தில் இன்னும் தொடர்புகள் இருக்கின்றது. இந்தத் தொடர்பு நன்மைக்காகவே இருக்கின்றது. இவ்விடயங்கள் குறித்து எமது கட்சி கூட்டத்திலும் நான் தெரிவித்துள்ளேன் - என்றார்.

இதன் போது தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான இரா. சாணக்கியன், தவராசா கலையரசன் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் உடனிருந்தனர்.

(ஐ)

# ‘அகம்’ நிறுவனத்தின் ஆவணங்கள் திருட்டு



திருமலை, ஒக. 02

திருகோணமலை உவர்மலையில் இயங்கி வரும் தன்னார்வ தொண்டு நிறுவனமான ‘அகம்’ மனிதாபிமான வள நிலையத்தில் இருந்த ஆவணங்கள் மற்றும் சிசிரிவி கமரா சேவர் ஆகியன திருடப்பட்டுள்ளன.

இது தொடர்பாக அகம் மனிதாபிமான வள நிலையத்தின் இணைப்பாளரும் வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஒருங்கிணைப்பாளருமான கண்டுமணி லவகுகராசா கருத்து தெரிவிக்கையில்,

கடந்த 30ம் திகதி அலுவலகத்தை வார விடுமுறைக்காக மூடி அதன் பின்னர் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணியளவில் அலுவலகத்தை திறந்த போது அங்கே எனது அறை கதவு உடைக்கபட்டு அங்கி ருந்த ஆவணங்கள் சிதைக்கப்பட்டிருந்தன. அதேபோல இன்னுமோர் அறையும் உடைக்கப்பட்டிருந்தது. லொக்கரும் உடைக்கப்பட்டிருந்தது. சிசிரிவி கமரா சேவர் திருடப்பட்டிருந்தது.

திருடர்களால் நடாத்தப்பட்டதாக நான் நினைக்கவில்லை காரணம் அலுவலகத்தில் மக்களுக்கு வழங்குவதற்கான அரிசி மற்றும் ஏனைய நிவாரணப் பொருட்கள் இருந்தன.

அதுபோல பெறுமதியான மடிக்கணினி, கெமரா, கணினித் தொகுதி போன்ற பொருட்கள் இருக்கின்றன. இவ்வாறான நிலையில், ஆவணங்களை மாத்திரம் திருடி இருக்கிறார்கள். இது சந்தேகத்தை ஏற்படுத்தி இருக்கிறது. எமது, நிறுவனமானது பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஜனநாயக ரீதியாகவும் சட்ட ரீதியாகவும் போராடுகின்ற அமைப்பு அது மாத்திரம் இல்லாமல் 15 அமைப்புக்கள் கூட்டணியாக இருக்கின்ற வடக்கு கிழக்கு அபிவிருத்திக்குழுவின் ஒருங்கிணைப்பாளராகவும் நான் இருந்து வருகின்றேன்- என்றார்.

# இலங்கையர் குவைத்தில் மரணம்

திருமலை, ஒக. 02

திருகோணமலை மாவட்டத்தின் முள்ளிப்பொத்தானை பிரதேசத்தைச் சேர்ந்த முகம்மது யாசீன் நயீம் (வயது-48) என்பவர், குவைத்தில் உயிரிழந்துள்ளார்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான இவர், மாரடைப்பு காரணமாக உயிரிழந்துள்ளார். சடலம், குவைத் வைத்திய சாலை ஒன்றில் வைக்கப்பட்டுள்ளது.

# திருடிய நகைகளை அடகு வைத்தவர் கைது

மட்டக்களப்பு, ஒக. 02

நகை திருட்டில் ஈடுபட்ட சந்தேகத்தில் நபரொருவரை கைது செய்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடி ஜூம்ஆப் பள்ளிவாசல் வீதியிலுள்ள வீடொன்றில் கடந்த 26 ஆம் திகதி சுமார் 6 பவுண் நகைகள் திருடப்பட்டுள்ளன.

இவ்வாறு திருடப்பட்ட நகைகளை கண்டுபிடிக்க பொலிஸாருடன் இணைந்து நகை உரிமையாளர்கள் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வந்தனர்.

இந்நிலையில், திருடப்பட்ட நகைகளை தனியார் அடகு நிலையம் ஒன்றில் நபரொருவர் அடகு வைக்கச் சென்றபோது நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(அ)

# பனங்காடு பிரதேச வைத்தியசாலை அபிவிருத்திப்பணி அங்குரார்ப்பணம்




அம்பாறை, ஒக. 02

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையினால் பி.எஸ்.எஸ்.பி செயற்றிட்டத்தின் கீழ் தெரிவான அக்கரைப்பற்று - பனங்காடு பிரதேச வைத்தியசாலையில் அபிவிருத்திப்பணிகளை அங்குரார்ப்பணம் செய்யும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஐ.எல்.எம். றிபாஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். மேலும் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர் டாக்டர் எம்.பி. அப்துல் வாஜித், பணிமனை திட்டமிடல் வைத் திய அதிகாரி எம்.சீ.எம்.மாஹிர், பனங்காடு பிரதேச வைத்தியசாலை பொறுப்பதிகாரி, வைத்தியர்கள், சுகாதார உத்தியோகத்தர்கள், பனங்காடு பிரதேச வைத்திய சாலை அபிவிருத்தி குழுவினர் முக்கியஸ்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(அ)

# தனக்கு தானே துப்பாக்கியால் சுட்ட உபபொலிஸ் பரிசோதகர்

## அம்பாறையில் சம்பவம்

அம்பாறை, ஒக. 02

அம்பாறையில் கடமையாற்றும் உப பொலிஸ் பரிசோதகர் ஒருவர் தனக்கு தானே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளார்.

சம்பவத்தில் படுகாயமடைந்த உப பொலிஸ் பரிசோதகர் தற்போது அம்பாறை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக தெரிக்கப்படுகின்றது.

இவர் ஒரு பிள்ளையின் தந்தையான, ஹங்வெல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 56 வயதுடைய வராவார்.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

(அ)

ஈழநாடு



# கருங்கடலில் ரஷ்யக் கடற்படையின் தலைமையகம் மீது ட்ரோன் தாக்குதல்

## கடற்படையினர் 5 பேர் காயம்



மொஸ்கோ, ஒக. 02

கருங்கடல் பிராந்தியத்தில் உள்ள ரஷ்ய கடற்படை தலைமையகம் மீது உக்ரைன் நடத்திய ட்ரோன் தாக்குதலில் கடற்படையினர் 5 பேர் காயமடைந்ததாக ரஷ்யா குற்றஞ்சாட்டியுள்ளது.

ரஷ்ய கடற்படை தினக் கொண்டாட்டங்களுக்கான ஏற்பாடுகள் இடம்பெற்றுவந்த நிலையில் நேற்று முன் தினம் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக ரஷ்யாவுடன் இணைக்கப்பட்ட கிரிமியாவில் உள்ள சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தனது சொந்த ஊரான செயின்ட். பீற்றர்ஸ்பேர்க்கில் கடற்படை தின கொண்டாட்டங்களை பார்வையிடுவதற்கு சில மணி நேரங்களுக்கு முன்னதாக உக்ரைன் ட்ரோன் தாக்குதல் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

கருங்கடல் பிராந்தியத்தில் உள்ள ரஷ்ய கடற்படை தலைமையகம் மீது ட்ரோன் தாக்குதல் நடத்தப்பட்டதாக ரஷ்யாவின் கருங்கடல் கடற்படையின் தாயகமான செவாஸ்டோபோல் ஆளுநர் மிகைல் ரஸ்வோஜாயேவ் உறுதி செய்துள்ளார்.

எனினும் இந்தத் தாக்குதல் குறித்து உக்ரைன் பாதுகாப்பு அமைச்சு கருத்து எதனையும் வெளியிடவில்லை. இந்த தாக்குதலில் கடற்படை தலைமையகத்தில் கடமையில் இருந்த ஐந்து காயமடைந்ததாக ரஷ்யாவின் மத்திய பாதுகாப்பு சேவை உறுதி செய்தது.

இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து ஒழுங்கு செய்யப்பட்ட அனைத்து கடற்படை தின கொண்டாட்டங்களும் பாதுகாப்பு காரணங்களுக்காக இரத்துச் செய்யப்பட்டன. (அ)



# ஓய்வு பெறும் அவசியம் தற்போது ஏற்படவில்லை

## பாப்பரசர் பிரான்சிஸ் கருத்து

ரோம், ஒக. 02

ஓய்வுக்கான அவசியம் தனக்கு தற்போது ஏற்படவில்லை என பாப்பரசர் பிரான்சிஸ் தெரிவித்துள்ளார்.

இந்த வார ஆரம்பத்தில், கனடாவுக்கு பயணம் மேற்கொண்ட பாப்பரசர் பிரான்சிஸ் வரலாற்று சிறப்புமிக்க பயணத்தின் முடிவில் ஊடகவியலாளர்களைச் சந்தித்து கருத்து தெரிவிக்கையில் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் -

இந்த கனடா பயணம் தீவிரமாகவும் ஆழமாகவும் இருந்தது. இன்று வரை ஓய்வுக் கதவை நான் தட்டவில்லை. என்னால் பதவி விலக முடியும். ஆனால், ஓய்வுக்கான அவசியம் தற்போது எனக்கு ஏற்படவில்லை.

உடல் நிலையை கருத்தில் கொண்டால் பதவி விலகுவது குறித்து பரிசீலிக்க வேண்டிய நேரம் விரைவில் வரக்கூடும். ஆனால், இப்போது இல்லை. இந்த வயதில் எனது முழங்கால் வலியுடன் என்னால் தொடர்ந்து பயணிக்க முடியும் என்று நான் நினைக்கவில்லை.

தேவாலயத்திற்கு தொடர்ந்து சேவை செய்ய நினைக்கிறேன். அதற்கு என்னை நான் ஆரோக்கியமாக வைத்து கொள்ள வேண்டும் - என்றார். (அ)

# தானியம் ஏற்றிய முதல் கப்பல் உக்ரைனில் இருந்து புறப்பட்டது!

கீவ், ஒக. 02

தானியங்களை ஏற்றிச் செல்லும் முதல் கப்பல் உக்ரைன் துறைமுகத் திலிருந்து உலக உணவு நெருக்கடியைத் தணிக்கும் நோக்கில் புறப்பட்டது.

கருங்கடல் வழியாக உக்ரைன் தானிய ஏற்றுமதியை மீண்டும் தொடங்க கடந்த ஜூலை 22ஆம் திகதி, ரஷ்யாவுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டது.

இந்த திட்டத்தில், உக்ரைனிய கப்பல்கள் தானியக் கப்பல்களை துறைமுக நீர் வழியாக உள்ளேயும் வெளியேயும் வழிநடத்துகின்றன.

ஏற்றுமதி நகரும்போது ரஷ்யா ஒரு போர்நிறுத்தத்திற்கு ஒப்புக் கொள்கிறது. துருக்கி - ஐக்கிய நாடுகள் சபையின் ஆதரவுடன் ஆயுதக் கடத்தல் குறித்த ரஷ்ய அச்சத்தைப் போக்க கப்பல்களை ஆய்வு செய்கிறது. கருங்கடல் வழியாக தானியங்கள் மற்றும் உரங்களை ரஷ்ய ஏற்றுமதி செய்வதற்கும் இந்த ஒப்பந்தம் உதவுகிறது.




ரஷ்யாவின் பெப்ரவரி 24 படையெடுப்பிற்குப் பிறகு உக்ரைனிய தானியங்களின் உலகப் பற்றாக்குறை மில்லியன் கணக்கானவர்களை பட்டினி ஆபத்தில் ஆழ்த்தியுள்ளது.

படையெடுப்பு, உணவு விலைகளை உயர்த்தியது, எனவே உக்ரைனின் துறைமுகங்களைத் தடுப்பதற்கான ஒப்பந்தம் முக்கியமானது. ஒடேசாவில் சுமார் 20 மில்லியன் டன் தானியங்கள் இருப்புகளில் சிக்கியுள்ளன. (அ)

# குரங்கம்மை தொற்றினால் இந்தியாவில் முதல் மரணம்

புதுடில்லி, ஒக. 02

இந்தியாவில் குரங்கம்மையால் முதல் மரணம் பதிவாகியுள்ளது. ஐக்கிய அரபு அமீரகத்தில் இருந்து கடந்த வாரம் கேரளா வந்த நிலையில் சிகிச்சை பெற்று வந்த இளைஞனே கடந்த சனிக்கிழமை உயிரிழந்ததாக கேரள சுகாதார அமைச்சர் வீணா தெரிவித்தார்.

உயிரிழந்த 23 வயதான இளைஞன் வெளிநாட்டிலிருந்து திரும்பிய போது குரங்கம்மை தொற்று அறிகுறிகளைக் கொண்டிருக்கவில்லை. அவருக்கு ஐக்கிய அரபு அமீரகத்தில் நடத்தப்பட்ட சோதனையில் குரங்கம்மை உறுதி செய்யப்பட்ட அறிக்கையை இளைஞனின் உறவினர்கள் அவர் இறந்த பின்னரே ஒப்படைத்ததாக கேரள சுகாதர அமைச்சு தெரிவித்துள்ளது.

குரங்கு அம்மை அறிகுறியுடன் இருந்த நபர் உயிரிழந்தது குறித்து உயர்மட்ட விசாரணை நடத்தப்படும் என்று கேரள சுகாதாரத்துறை அமைச்சர் வீணா தெரிவித்துள்ளார்.

மேலும், குரங்கு அம்மை அறிகுறி இருந்த நபருக்கு சிகிச்சையளிப்பதில் தாமதம் ஏற்பட்டதா என்பது குறித்தும் விசாரணை நடத்தப்படுவதாகவும் அவர் கூறினார். (அ)

# ஆசிய சுற்றுப்பயணத்தை தொடங்கினார் பெலோசி

## சீனாவின் எதிர்ப்பை மீறி தாய்வான் செல்வரா?

நியூயோர்க், ஒக. 02

அமெரிக்க பாராளுமன்ற அவைத்தலைவர் நான்சி பெலோசி, சிங்கப்பூர், மலேசியா, தென் கொரியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுக்குச் சுற்றுப்பயணத்தை தொடங்கியுள்ளதாக அவரது அலுவலகம் தெரிவித்துள்ளது.

எனினும் சீனாவின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் அவர் தாய்வானுக்கு செல்வாரா? இல்லையா? என்பது குறித்த தகவல்கள் அதில் குறிப்பிடப்படவில்லை. இந்நிலையில் ஏற்கனவே திட்டமிட்டவாறு அவர் தாய்வானுக்கு செல்லக்கூடும் என்று தீவிர ஊகங்கள் உள்ளன.

தாய்வான் சீனாவின் ஒரு பிராந்தியம் என பீஜிங் உரிமை கோரி வருகிறது. இந்நிலையில் நான்சி பெலோசியின் தாய்வானுக்கான பணத்தை தொடர அமெரிக்கா வலியுறுத்தினால் இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டை பாதுகாக்க உறுதியான மற்றும் வலுவான நடவடிக்கைகளை சீனா எடுக்கும் என்று சீன வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ஜாவோ லிஜியன் பீஜிங்கில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டின்போது கூறினார்.

பெலோசியின் தாய்வானுக்கான உத்தேச பயணத்திற்கு உறுதியான எதிர்ப்பை அமெரிக்கத் தரப்பிற்கு பலமுறை சீனா தெளிவுபடுத்தியுள்ளது. அதை மீறி பெலோசி தாய்வான் பயணம் செய்தால் அதனால் ஏற்படும் கடுமையான விளைவுகளுக்கு அமெரிக்கா முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும்.எந்த ஒரு சூழ்நிலையையும் எதிர்கொள்ள நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று சீன வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ஜாவோ லிஜியன் தெரிவித்தார்.

இதேவேளை, பெலோசி தாய்வான் செல்ல முடிவெடுத்தால் சீனத் தாக்குதல் அபாயத்திலிருந்து அவரைப் பாதுகாப்பதற்கான ஆயத்த நடவடிக்கைகளை அமெரிக்கா மேற்கொள்ளும் என பாதுகாப்பு துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தாய்வானுக்கு நான்சி பெலோசி சென்றால் 1997-ஆம் ஆண்டுக்குப் பிறகு அங்கு செல்லும் அமெரிக்க உயர்நிலை மக்கள் பிரதிநிதியாக அவர் இருப்பார்.

அந்த வகையில், அவருக்கு அங்கு பாதுகாப்பு அளிக்க வேண்டியது படைகளின் கடமையாகும். அவர் பயணம் மேற்கொள்வது தாய்வான் என்பதால், அபாயம் குறைந்த மற்ற நாடுகளில் அளிக்கப்படும் பாதுகாப்பை விட அங்கு அவருக்கு கூடுதலாக பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படும் என அமெரிக்க பாதுகாப்பு அதிகாரிகளை மேற்கோள்காட்டி ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நான்சி பெலோசி செல்லும் விமானத்தின் மீது சீனா தாக்குதல் நடத்தும் என்று அதிகாரிகள் கருதவில்லை. எனினும், தாய்வான் மிகவும் சர்ச்சைக்குரிய பகுதி என்பதால் தவறான புரிதல்கள், கணிப்புகள் போன்ற காரணங்களால் நிலைமை மோசம் அடைவதற்கான வாய்ப்புகள் உள்ளன. அவற்றைத் தவிர்ப்பதற்கான முன்னேற்பாடுகள் செய்யப்படும். நான்சி பெலோசி தாய்வான் செல்வது உறுதியானால், இந்தப் பிராந்தியத்தில் கண்காணிப்பு விமானங்கள் போன்ற பாதுகாப்பு வசதிகள் அதிகரிக்கப்படும் எனவும் அமெரிக்க பாதுகாப்பு துறையினர் தெரிவித்துள்ளனர். (அ)

# இங்கிலாந்துடனான ரி-20 தொடர் தென்னாபிரிக்கா கைப்பற்றியது

சௌதாம்ப்டன், ஒக. 02

தென்னாபிரிக்கா அணி 90 ஓட்டங்கள் வித்தியாசத் தில் இங்கிலாந்தை வீழ்த்தி வெற்றி பெற்றது. இதன் மூலம் இருபது - 20 தொடரை 2 -1 என்ற கணக்கில் அந்த அணி கைப்பற்றியது.

தென்னாபிரிக்கா அணி இங்கிலாந்தில் சுற்றுப்பய ணம் செய்து விளையாடி வருகிறது. முதலில் நடைபெற்ற ஒருநாள் தொடரில் இரு அணிகளும் 1-1 என சமநிலை வகித்தன.

இதையடுத்து நடந்த இருபது - 20 தொடரின் இரு போட்டிகளின் முடிவில் இரு அணிகளும் 1-1 என சம நிலை வகித்தன. இந்நிலையில், வெற்றியாளரை நிர்ண யிக்கும் 3ஆவது இருபது - 20 போட்டி சௌதாம்ப்ட னில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து முதலில் பந்துவீச்சை தெரிவு செய்தது. இதன்படி, முதலில் துடுப் பெடுத்தாடிய தென்னாபிரிக்கா அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 191 ஓட்டங்களை எடுத்தது.

அந்த அணியின் ஹென்றிக்ஸ் அதிரடியாகஆடி 50 பந்துகளில் 9 பௌண்ட்ரி உள்பட 70 ஓட்டங்களை எடுத்தார். மார்க்ரம் 51 ஓட்டங்கள் எடுத்தார். இங்கிலாந்து அணி சார்பில் டேவிட் வில்லி 3




விக்கெட் வீழ்த்தினார்.

இதையடுத்து, 192 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இங்கிலாந்து அணி களமிறங்கியது. பெயர்ஸ்ரோ அதிகபட்சமாக 27 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார். ஜசன் றோ 17 ஓட்டங்கள், அணித் தலைவர் ஜோஸ் பட்லர் மற்றும் கிறிஸ் ஜோர்தான் ஆகியோர் 14 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

சீரான இடைவெளியில் இங்கிலாந்தின் விக்கெட்கள் வீழ்ந்தன. இறுதியில், இங்கிலாந்து 101 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. இதன்மூலம் 90 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தென்னாபிரிக்கா அணி வெற்றி பெற்றது.

தென்னாபிரிக்கா சார்பில் ஷம்சி 5 விக்கெட்டும், மகராஜ் 2 விக்கெட்டும் வீழ்த்தினர். இந்த வெற்றியின் மூலம் தென்னாபிரிக்கா 2-1 என இருபது -20 தொடரைக் கைப்பற்றி அசத்தியது.

ஆட்ட நாயகன் விருது ஷம்சிக்கும், தொடர் நாயகன் விருது ஹென்றிக்ஸூக்கும் அளிக்கப்பட்டது. இரு அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடர் ஒகஸ்ட் 17ஆம் திகதி தொடங்க உள்ளது.



# செய்தியாளர் சந்திப்பு இடத்தில் ஆட்டம் போட்ட வீராங்கனைகள்!

லண்டன், ஒக. 02

ஐரோப்பிய பெண்கள் சம்பியன்ஷிப் உதைபந்தாட்டத் தொடரின் இறுதிப்போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில், இங்கிலாந்து - ஜேர்மனி அணிகள் மோதின. பரபரப்பாக நடந்த இப்போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் ஜேர்மனியை வீழ்த்தி இங்கிலாந்து அபார வெற்றிபெற்றது.

இந்த வெற்றியின் மூலம் 56 ஆண்டு கால ஐரோப்பிய பெண்கள் சம்பியன்ஷிப் உதைபந்தாட்ட வரலாற்றில் முதல் முறையாக இங்கிலாந்து அணி சம்பியன் பட்டம் வென்று சாதனை படைத்துள்ளது.

இந்த வெற்றிக்கு பின் இங்கிலாந்து பெண்கள் உதைபந்தாட்ட அணியின் மேலாளர், நிர்வாகிகள் செய்தியாளர்களை சந்தித்தனர். இந்த நிகழ்வு பல்வேறு தொலைக்காட்சிகளில் நேரடியாக ஒளிபரப்பாகிக்கொண்டிருந்தது.

அப்போது, அங்கு வந்த இங்கிலாந்து உதைபந்தாட்ட வீராங்கனைகள் செய்தியாளர் சந்திப்பில் பேசிக்கொண்டிருந்த அணியின் மேலாளர், நிர்வாகிகளுக்கு நடுவே சென்றனர்.

பின்னர், அவர்களை சுற்றி ஆடி பாடி கொண்டாடினர். அப்போது, செய்தியாளர் சந்திப்பு நடைபெற்ற இடத்தில் இருந்த மேசைமீது ஏறிய இங்கிலாந்து அணியின் கோல் காப்பாளர் மற்றும் வீராங்கனைகள் ஆட்டம் போட்டனர். இந்த நிகழ்வால் அங்கு கூடியிருந்த அனைவரும் மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆரவார மடைந்தனர்.



# தினேஷ் வயதில் பாகிஸ்தானில் உள்ளூரில்கூட விளையாடமுடியாது

இஸ்லாமாபாத், ஒக. 02

அவரின் வயதில் பாகிஸ்தானில் உள்நாட்டு கிரிக்கெட்டில்கூட விளையாட முடியாது என இந்திய கிரிக்கெட் வீரர் தினேஷ் கார்த்திக்கை மனதார புகழ்ந்துள்ளார் பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் சல்மான் பட். இதன் மூலம் அவர் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை இகழ்ந்துள்ளார்.

37 வயதான தினேஷ் கார்த்திக் இந்திய கிரிக்கெட் அணியில் அண்மையில் மீண்டு வந்தார். இருபது - 20 கிரிக்கெட்டுக்கான அணியில் அவர் தவிர்க்க முடியாத துடுப்பாட்ட வீரராக உருவாகி உள்ளார். அவரது ரோல் ஆட்டத்தை முடித்து கொடுக்கும் பினிஷர் பணி என்பது தெளிவாக உள்ளது. அதற்கு ஏற்ற வகையில் அவரும் சிறப்பாக விளையாடி வருகிறார். மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான முதல் இருபது - 20 போட்டியில் 19 பந்துகளில் 41 ஓட்டங்களை சேர்த்து அசத்தினார்.

அவரின் மீள்வருகை குறித்து கிரிக்கெட் உலகின் ஜாம்பவான்கள் தொடங்கி முன்னாள் வீரர்கள் வரை அனைவரும் புகழ்ந்துள்ளனர். அதில் பிந்தைய நபராக இணைந்துள்ளார் முன்னாள் பாகிஸ்தான் அணியின் தலைவர் சல்மான் பட்.

"நல்வாய்ப்பாக தினேஷ் கார்த்திக் இந்தியாவில் பிறந்துவிட்டார். அவர் மட்டும் பாகிஸ்தானில் பிறந்திருந்தால் அவரது வயதுக்கு இங்கு உள்நாட்டு கிரிக்கெட்டில் கூட விளையாடி இருக்க முடியாது.

இந்திய கிரிக்கெட் அணியின் வருங்கால பெஞ்ச் ஸ்ட்ரென்த் செம பலமாக உள்ளது. அது அப்பட்டமாக தெரிகிறது. தரமான அணியை இந்தியர்கள் கட்டமைத்து உள்ளார்கள். சூர்யகுமார் யாதவ், ஷ்ரேயஸ் ஐயர், அர்ஷ்தீப் சிங், சுப்மன் கில் என திறமையான இளம் வீரர்கள் நிறைய பேர் இந்திய அணியில் நிறைந்துள்ளனர். பாகிஸ்தான் அணியை பாருங்கள் ஷாஹீன் அப்ரிடியை பெரிதும் நம்பி இருக்க வேண்டிய சூழல் உள்ளது" என தெரிவித்துள்ளார் பட்.

# காதலியை கரம்பிடித்தார் ஆஸியின் பட் கம்மின்ஸ்!

சிட்னி, ஒக. 02

தனது நீண்ட நாள் காதலியை கரம் பிடித்துள்ளார் அவுஸ்திரேலிய டெஸ்ட் கிரிக்கெட் அணியின் தலைவர் பட் கம்மின்ஸ். அது குறித்து சமூக வலைதளத்தில் அவர் பகிர்ந்துள்ளார்.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியை டெஸ்ட் கிரிக்கெட்டில் வழிநடத்தி வருகிறார் வேகப்பந்து வீச்சாளரான பட் கம்மின்ஸ். இவர் ஐ. பி. எல். கிரிக்கெட்டில் கொல்கத்தா நைற் ரைடர்ஸ் அணிக்காக விளையாடி வருகிறார். அந்த அணியின் ஆஸ்தான பந்துவீச்சாளர்களில் ஒருவர்.

29 வயதான அவர் பட் கம்மின்ஸ், பிரிட்டிஷ் நாட்டில் பிறந்த 31 வயதான பெக்கி பாஸ்டன் என்பவரை காதலித்து வந்தார். இவர்களுக்கு கடந்த 2020இல்



நிச்சயதார்த்தம் நடந்தது.

தொடர்ந்து கடந்த ஆண்டு தங்களது முதல் குழந்தையை இணையர் இருவரும் உலகுக்கு வரவேற்றனர். இந்நிலையில், தற்போது அவர்கள் இருவரும் திருமணம் செய்து கொண்டுள்ளனர்.

நியூ சவுத் வேல்ஸில் உள்ள பைரான் பே எனும் பகுதியில் அமைந்துள்ள விடுதி ஒன்றில் திருமண விழா நடைபெற்றுள்ளது. இதில் கம்மின்ஸ் உடன் கிரிக்கெட் விளையாடி வரும் சக அவுஸ்திரேலிய வீரர்களான ஸ்டார்கே, ஹசல்வூட், டிராவிஸ் ஹெட், நதன் லயன் என பலரும் கலந்து கொண்டுள்ளனர்.

கம்மின்ஸ், தனது திருமணம் குறித்து சமூக வலைதளத்தில் பகிர்ந்தும் பிரபலங்கள் தொடங்கி ரசிகர்கள் வரை பலரும் அவருக்கு வாழ்த்துத் தெரிவித்த வண்ணம் உள்ளனர்.

(ஐ)

# பாகிஸ்தானின் சாதனையை சமன்செய்யுமா இந்திய அணி?

டுபாய், ஒக. 01

இந்தியா - மேற்கிந்தியத் தீவகள் அணிகளுக்கு இடையேயான 5 போட்டிகள் கொண்ட இருபது - 20 தொடர் நடைபெற்று வருகிறது. இந்த இரு அணிகளுக் கும் இடையேயான முதலாவது இருபது -20 போட்டியில் இந்திய அணி 68 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணியை வீழ்த்தியது.

இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது போட்டியில் இந்திய அணி வெற்றி பெற்றால் புதிய சாதனை படைக்கும்.

இதுவரை இந்திய அணி மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிராக 21 இருபது -20 போட்டிகளில் விளையாடி 14 போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளது.

அதேவேளையில் பாகிஸ்தான் அணி மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிராக 21 இருபது -20 போட்டிகளில் விளையாடி 15 வெற்றிகளை பெற்றுள்ளது. இரண்டாவது போட்டியில் இந்திய அணி வெற்றி பெறும் பட்சத்தில் பாகிஸ்தான் அணியின் சாதனை சமப்படுத்தப்படும்



இதே வேளையில் ஒரு குறிப்பிட்ட அணிக்கு எதிராக அதிக வெற்றிகளை பெற்ற அணியாக இந்திய அணி தான் இந்த பட்டியலிலும் முதலிடம் வகிக்கிறது. இருபது -20 கிரிக்கெட்டைப் பொறுத்தவரை இந்திய அணி இலங்கை அணிக்கு எதிராக மட்டும் 17 வெற்றிகளை பெற்றுள்ளது. (ஐ)

# தானிஷ் அலியின் மறியல் நீடிப்பு!

கொழும்பு, ஓக. 02

தேசிய தொலைக்காட்சி கலையகத்துக்குள் பிரவேசித்து, ஒளிபரப்பு நடவடிக்கைக்கு இடையூறு ஏற்படுத்தியதாக, குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ள,

தானிஷ் அலியை எதிர்வரும் 15 ஆம் திகதி வரை மீள விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அவர் நேற்று காலை கொழும்பு பிரதான நீதவான் நீதி மன்றில் முன்னிலைப்படுத்தப் பட்டபோதே, இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜூலை 13 ஆம்திகதி தேசிய தொலைக்காட்சிக்குள் பிரவேசித்து வன்முறையில் ஈடுபட்டமை, அதன் ஒளிபரப்புக்கு இடையூறு விளைவித்தமை உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட் டுக்களின் கீழ் தானிஸ் அலி கைது செய்யப்பட்டுள்ளார். (அ)

# நாட்டின் இருவேறு பகுதிகளில் விபத்துக்களில் மூவர் மரணம்

கொழும்பு, ஓக. 02

நேற்று முன் தினம் இரவு தங்காலை, ஹேனகடுவ பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் இரு இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர்.

தங்காலையிலிருந்து திஸ்ஸ மஹாராம நோக்கிச் சென்ற கார் ஒன்று வீதியை விட்டு விலகி, மரமொன்றுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின்போது கார் 5 பேர் பயணித்துள்ளதுடன், அவர்களில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, தனமல்வில - உடவளவ வீதியில் டிப்பர் ரக வாகனமொன்று விபத்துக்குள்ளானதில் அதன் உதவியாளர் உயிரிழந்துள்ளார்.

வெள்ளவாய வருணகம பிரதேசத்தை சேர்ந்த 38 வயதுடைய நபரொருவரே உயிரிழந்துள்ளார். (அ)


## மரண அறிவித்தல்



மலர்வு 12 - 10 -

உதிர்வு 26 - 07 - 2022

## சூரியன் செல்வராஜா (விக்கினேஷ்)

யாழ். குரும்பசிட்டியை பிறப்பிடமாகவும், சுவிஸ் Olten ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சூரியன் செல்வராஜா அவர்கள் 26.07.2022 செவ்வாய்க்கிழமை அன்று அகாலமரணம் அடைந்தார்.

அன்னார், சூரியன், காலஞ்சென்ற நல்லம்மா தம்பதிகளின் மூத்த புத்திரனும், காலஞ்சென்ற சின்னப்பொடிராசா, சோதி தம்பதிகளின் அருமை மருமகனும்,கௌரீஸ்வரி(ரதி) அவர்களின் அன்புக் கணவரும்,விதுசா, விதுன் ஆகியோரின் அன்புத் தந்தையும், விமலா, அப்பன், ராசு, குமாரி, சாந்தி,வாசன் ஆகியோரின் அன்புச் சகோதரனும்,கௌசலா தேவி, கௌலேஷ்வரன், கௌரி, ராஜேஷ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

கிரியை
Tuesday, 02 Aug 2022 7:00 AM
Friedhof Niedergösgen 5013 Niedergösgen, Switzerland

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நிருபன் - பெறாமகன்.

தொடர்புகளுக்கு:
ராஜேஸ்வரன் - மைத்துனர் Mobile : +41787471383
நிருபன் - பெறாமகன் Mobile : +41782309030


# கோட்டா நாடு திரும்புவதற்கு இது சரியான நேரம் இல்லை!

## ஜனாதிபதி ரணில் கூறுகின்றார்

கொழும்பு, ஓக. 02

**முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷ இலங்கைக்கு திரும்புவதற்கு இது சரியான நேரம் அல்லவென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

சர்வதேச ஊடகமொன்றுக்கு நேற்று அளித்த செவ்வியில் ஜனாதிபதி இதனைக் கூறியுள்ளார்.

ஜனாதிபதி இந்த சந்தர்ப்பத்தில் நாடு திரும்புவது, பொருளாதார வீழ்ச்சி, காரணமாக அவரை, வெளியேற்றுவதற்காக அணி திரண்ட பல்லாயிரக் கணக்கான போராட்டக்காரர்கள் மத்தியில் மீண்டும் எதிர்ப்பலைகளை தூண்டக்கூடும் என்று ஜனாதிபதி கூறியுள்ளார்.

அவர் மீண்டும் நாடு திரும்பவுள்ள தாக உறுதிபடுத்தப்படாத தகவல்கள் வெளியாகியிருந்தன. இதனிடையே அவருடைய குறுங்கால பயண அனுமதியை மேலும் 14 நாட்களால் (ஓகஸ்ட் 11 வரை) நீடித்து சிங்கப்பூர் அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

இந்த நிலையிலேயே அவர் திரும்பி வருவதற்கான உகந்த நேரம் இதுவென தாம் நம்பவில்லை என்று தி வோல் ஸ்ட்ரீட் ஜேர்னலுக்கு அளித்த செவ்வியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.



"நாங்கள் ஏற்கனவே அடிமட்டத்தை அடைந்துவிட்டோம் என்று நான் நினைக்கிறேன்.

நான் சுரங்கப்பாதையின் முடிவில் ஒளியைக் காண்கிறேன். நாம் முடிந்தளவு விரைவாக அதை அடைய முயற்சிக்கிறேன்" என்றும் ரணில் தெரிவித்துள்ளார்.

இலங்கை சுமார் 12 பில்லியன் டொலர் வெளிநாட்டுக் கடனைத் திருப்பிச் செலுத்துவதை இடைநிறுத்தியது 2025 ஆம் ஆண்டின் இறுதிக்குள் கிட்டத்தட்ட 21 பில்லியன் டொலரை செலுத்த வேண்டியுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் ஊழியர் மட்ட உடன்பாடு ஓகஸ்ட் மாத இறுதிக்குள் எட்டப்படும் என்று எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க குறிப்பிட்டார்.

எரிபொருள், உணவு மற்றும் உரங்கள் உள்ளிட்ட அத்தியாவசிய இறக்கு மதிகளுக்காக அடுத்த ஆண்டு மற்றைய மூலங்களிலிருந்து 3 பில்லியன் டொலர்களை இலங்கை பெற வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையர்கள் தங்கள் பொருளாதார சூழ்நிலையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காண்பதற்கு சில மாதங்கள் ஆகும் என்றும் அவர் மேலும் கூறினார். (அ)

# "ஆரோக்கியத்தின் பாதையில்" விழிப்புணர்வு சைக்கிள் போரணி

## யாழ்.பல்கலையில் இருந்து முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், ஓக. 02

யாழ்.பல்கலைக்கழகத்தில் இருந்து விழிப்புணர்வு சைக்கிள் பேரணியொன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

யாழ் ஆரோக்கிய நகரத் திட்டத்தினால் முன்னெடுக்கப்பட்ட "ஆரோக்கியத்தின் பாதையில்" என்ற விழிப்புணர்வு சைக்கிள் பேரணி நேற்று காலை 7 மணியளவில் ஆரம்பித்து காலை 8 மணியளவில் நிறைவடைந்தது.

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட சைக்கிள் பேரணி அங்கிருந்து ஆடியபாதம் வீதி வழியாகக் கொக்குவில் சந்தியை அடைந்து, அங்கிருந்து கே.கே.எஸ் வீதி வழியாக ஆஸ்பத்திரி வீதியை அடைந்து, அவ் வீதி வழியாக வேம்படிச் சந்தியை வந்தடைந்தது. அங்கிருந்து பலாலி வீதி ஊடாகப் பரமேஸ்வராச் சந்தியை அடைந்து, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பிரதான வளாகத்தின் நுழைவாயிலில் நிறைவடைந்தது.

அண்ணளவாக 10 கிலோமீற்றர் தூரமுள்ள இந்த விழிப்புணர்வு சைக்கிள் பேரணியில் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் சி.சிறிசற்குணராஜா, மருத்துவபீட பீடாதிபதி இ.சுரேந்திரகுமாரன், வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க. மகேசன்,



யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி, யாழ் மாநகர முதல்வர் வி.மணிவண்ணன், யாழ். மாநகர ஆணையாளர் இ.த.ஜெயசீலன், மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோரின் பங்குபற்றலுடன், பல்கலைக்கழகப் பணியாளர்கள், மாணவர்கள், பாடசாலை மாணவர்கள் உட்படப் பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

பொதுமக்களிடையேயான சுகநலனில் அக்கறை கொள்ளலில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் உலக சுகாதார ஸ்தாபனத்தின் அனுசரணையுடன் முன்னெடுக்கப்படும் "யாழ் ஆரோக்கிய நகரம்" என்ற செயற்திட்டத்தின் கீழ் இந்த விழிப்புணர்வு சைக்கிள் பேரணி மேற்கொள்ளப்பட்டது.

உலக நாடுகள் பலவற்றில் உலக வங்கி "ஆரோக்கிய நகரங்கள்" என்ற எண்ணக்கருவை நடைமுறைப்படுத்தி கணிசமான ஆரோக்கிய நகரங்களை அடையாளப்படுத்தியும் உள்ளது.

அந்த அடிப்படையில் தென்னாசியாவிலேயே முதன் முறையாக யாழ்ப்பாண நகரம் தெரிவு செய்யப்பட்டு திட்டம் நடைமுறைப் படுத்தப்படுகின்றது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவபீடத்தின், சமுதாய மற்றும் குடும்ப மருத்துவத் துறையின் நேரடி ஒருங்கிணைப்பு மற்றும் நடைமுறைப்படுத்தலில் உலக சுகாதார ஸ்தாபனம், யாழ். மாநகர சபை, யுனிசெப், சுகாதார சேவைகள் திணைக்களம், நகர அபிவிருத்தி அதிகார சபை, கல்வி அமைச்சு, அரச - அரச சார்பற்ற நிறுவனங்கள், யாழ் மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் மற்றும் நல்லூர் பிரதேச செயலகங்கள் உட்படப் பல்வேறு தரப்பினரும் இத்திட்டத்தின் பங்காளிகளாகத் தமது ஒத்துழைப்பை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (அ)

## நல்லூரானுக்கு...

தொடர்ந்து, 24ஆம் திகதி புதன்கிழமை மாலை 4.45 மணிக்கு சப்பை ரதத் திருவிழாவும், மறுநாள் வியாழக்கிழமை காலை 6.15 மணிக்கு தேர்த் திருவிழா வும், அடுத்தநாள் வெள்ளிக்கிழமை காலை 6. 15 மணிக்கு தீர்த்தத் திருவிழா வும் அன்று மாலை கொடியிறக்கமும் இடம்பெறும்.

இதேவேளை, நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழாவை முன்னிட்டு நேற்று திங்கட்கிழமை முதல் வழமை போன்று ஆலயத்தை சூழவுள்ள வீதிகளில் போக்குவரத்து தடை செய்யப்பட்டு மாற்று வழிகள் அறிவிக்கப்பட்டுள்ளன. அத்துடன், திருவிழா ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்திய டைந்துள்ளன. மேலும், ஆலயத்தை சுற்றியுள்ள மடங்கள், மண்டபங்களில் விசேட நிகழ்வுகளும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நுவரெலியாவில்...

கிராமத்தில் மண் சரிவால் இரு வீடுகள் முற்றாக சேதமடைந்தன. இதில், அந்த வீடுகளில் இருந்த ஆறு பேரில் ஒருவர் காணாமல் போயுள்ளார். அவரைத் தேடும் பணிகள் இடம்பெற்ற போதிலும் கடும் மழையால் தேடும் பணிகள் மந்த கதியிலேயே இடம்பெற்று வருகின்றன என்று நேற்றிரவு தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம், வட்டவளையில் கடும் வெள்ளத்தால் சுமார் 50 வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. அங்கு வசித்தவர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டுள்ளனர்.

பல இடங்களில் பாறைகள், மண்மேடுகள் சரிந்தமையால் கொழும்பு - ஹற்றன் பிரதான வீதி உட்பட பல வீதிகளில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. இது மீட்பு பணிகளிலும் பெரும் தாமத்தை ஏற்படுத்தியுள்ளது. இதேபோன்று மலையகப் பகுதிக்கான ரயில் சேவைகளும் பாதிக்கப்பட்டுள்ளன. பல ரயில் சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

நீர்த் தேக்கங்களில் நீர் மட்டம் உயர்ந்தமையால் வான் கதவுகள் திறக்கப்படுகின்றன. (ஐ)

## மூன்றாவது...

கொழும்பு - காலிமுகத்திடலில் கோட்டா கோ கம போராட்டம் 100 நாட்களை கடந்து இடம்பெற்றது. இந்தப் போராட்டத்தின் பின்னர் ஜனாதிபதியாகப் பதவியேற்ற ரணில் விக்கிரமசிங்க போராட்டக்காரர்களை படைபலம் மூலம் அங்கிருந்து அகற்றினார். கடந்த ஜூலை 22ஆம் திகதி இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இதன் பின்னர், கடந்த ஜூலை 26ஆம் திகதி 30 -40 வயது மதிக்கத்தக்க ஒருவரின் உடலம் வெள்ளவத்தை கடற்படை காவலரணை அண்மித்து கரையொதுங்கியது. இந்தச் சடலம் யாருடையது என்பது நேற்று வரை உறுதி செய்யப்படவில்லை.

இதனிடையே, கடந்த 29ஆம் திகதி இளைஞர் கரையொதுங்கியது. இந்தச் சடலம் கொழும்பு - ஹோமகமையை சேர்ந்தவருடையது என அடையாளம் காணப்பட்டது. இந்த சடலம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் தொடர்ந்து வருகின்றனர்.

இந்நிலையில், நேற்று திங்கட்கிழமை அதிகாலையும் ஒரு சடலம் ஒதுங்கியது. இதுவும், 40 வயதுக்குள் மதிக்கத்தக்க நபருடையதாக இருக்கலாம் என்று கூறப்படுகின்றது. இந்த சடலத்தை அடையாளம் காணும் பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

போராட்டம் இடம்பெற்ற காலி முகத்திடல் பகுதியில் சடலங்கள் - அதுவும் இளைஞர்களின் சடலங்கள் ஒரு வாரத்துக்குள் மூன்று கரையொதுங்கியிருப்பது கொழும்பிலும் நாட்டு மக்கள் மத்தியிலும் ஒருவித அச்ச நிலையையும் பதற்ற நிலைமையையும் ஏற்படுத்தியுள்ளது. (ஐ)

### பொலிஸாரின் நடவடிக்கைக்கு எதிர்ப்பு

# புதுக்குடியிருப்பு பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் சுகயீனவிடுப்பு

முல்லைத்தீவு, ஓக. 02

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் இருந்து அத்தியாவசிய நோக்கத்திற்காக பாதுகாப்பான முறையில் வைக்கப்பட்டிருந்த மிகக் குறைந்த அளவிலான எரிபொருட்களை எடுத்து பொலிஸாரும் சில பிரதேச இளையோரும் கஞ்சா அல்லது போதைவஸ்துக்களை பிடித்தது போன்று செய்திகளை வெளியிட்டும் சமூக வலைத்தளங்களில் பதிவிடுவது தேவையற்ற விடயம் மட்டுமல்லாது எமது பிரதேச செயலகத்தையும், உத்தியோகத்தர்களையும் திட்டமிட்டு அவமானப்படுத்தும் செயலாகவே காணப்படுவதாக தெரிவித்து புதுக்குடியிருப்பு பிரதேச செயலக ஊழியர்கள் நேற்று சுகயீன விடுப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இவ்வாறு சுகயீன விடுப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பிரதேச செயலக ஊழியர்கள் கருத்து தெரிவிக்கையில்-

இப் பொருளாதார நெருக்கடி மிகுந்த இக்காலத்தில் மின்வெட்டு நேரம் அதிகமாக காணப்படுவதால் மின்பிறப்பாக்கியின் தேவைக்காக குறித்த 50 லீற்றர் டீசலை முன்னேற்பாடாக கொள்வனவு செய்து வைத்திருத்தல் பாரிய குற்றமில்லை.

களஞ்சிய அறையில் எலியின் பாதிப்பு அதிகமாக காணப்படுவதனாலும் வெப்பம் குறைவான பகுதியாக குளியலறை காணப்படுவதனாலும் எரிபொருளை குளியலறையில் வைப்பதென்பது இயல்பான விடயமே தவிர இது எரிபொருளினை பதுக்கும் நடவடிக்கை இல்லை. மண்ணெண்ணெய் நீர் இறைக்கும் இயந்திர பாவனைக்காக மிகக்குறைந்தளவிலான எண்ணெய் வைத்திருப்பது எந்தவகையில் குற்றமாக கருதமுடியும்.

இவ் எரிபொருட்கள் அனைத்தும் அத்தியாவசிய தேவைக்கு எமது பிரதேச செயலகத்தில் மிகக்குறைந்த அளவிலேயே காணப்பட்டுள்ளது.

எனவே எந்த வகையிலும் நியாயமில்லாத ஒரு சிலரின் பேச்சை மட்டும் கருத்தில் கொண்டு புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மேற்கொண்ட குறித்த செயலானது பிரதேச செயலாளர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் மன உளைச்சலை ஏற்படுத்தி உள்ளதன் காரணமாக குறித்த செயலிற்கு எதிர்ப்பினை தெரிவிக்கும் பொருட்டு அனைத்து உத்தியோகத்தர்களும் சுகயீன விடுப்பு போராட்டத்தில் ஈடுபடஉள்ளோம் என்பதைத் தெரி வித்துக்கொள்கின்றோம்-என்றனர். (அ)

## சிறுபான்மை...

இரண்டாம் தர பிரஜைகளாக மாற்றும் முயற்சிகள் நாட்டை பிளவுபடுத்தும்.

இந்தியாவில் லிபரல் ஜனநாயகத்தை நிச்சயம் வலுப்படுத்தவேண்டும். ஜனநாயகம் ஒரு பலவீனம் அல்லது பின்னடைவு என்ற எணணம் இந்தியாவில் சில தரப்பினரிடம் காணப்படுகின்றது. இந்தியா வளர்ச்சியடைவதற்கு வலுவான எதேச்சதிகார தலைமைத்துவம் சில கட்டுப்பாடுகளுடன் அவசியம் என்ற எண்ணம் காணப்படுகின்றது. நாங்கள் அந்த திசையை நோக்கி பயணிப்பதுபோல தோன்றுகின்றது.

லிபரல் ஜனநாயகத்தையும் அதன் கட்டமைப்புகளையும் வலுப்படுத்துவதிலேயே எங்கள் எதிர்காலம் தங்கியுள்ளது - பலவீனப்படுத்துவதில் இல்லை - இதனை வலுப்படுத்துவதே எங்கள் வளர்ச்சிக்கு அவசியமானது - என்றும் தெரிவித்தார். (ஐ)

## சர்வகட்சி...

என்ன விடயங்களை கைக்கொள்ளப் போகிறீர்கள்?, நாணய நிதியத்துடனான ஒப்பந் தம் தவறினால் என்ன மாற்று நடவடிக் கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பன தொடர்பிலும் வெளிப்படையாகப் பேசப்பட வேண்டும்.

மேலும், நீங்கள் உருவாக்க உத்தேசித்துள்ள புதிய அரசாங்கம் அனைத்து அரசியல் கட்சிகளையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். ஒவ்வொரு கட்சியும் குழுக்களில் இணைவதன் மூலம் பாராளுமன்றத்தில் பங்கு வகிக்க முடியும். அத்துடன், உருவாக்கவிருக்கும் அரசாங்கம் உண்மையான சர்வகட்சி அரசாங்கமாக - சகல அரசியல் கட்சிகளின் சம்மதத்துடன் உருவாக்கப்பட்டதாக இருக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார். (ஐ)

# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் அதிபர் காரியாலயம் திறந்துவைப்பு



யாழ்ப்பாணம், ஓக. 02

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் அதிபர் காரியாலயம் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

அதிபர் காரியாலயத்துக்கான கட்டடம் ஏற்கனவே அமைக்கப்பட்டு இருந்த நிலையில் புனரமைக்கப்பட்டு நேற்று திறந்து வைக்கப்பட்டது.

காரியாலயத்தை பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஸ்ரீதரன் மற்றும் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆகியோர் திறந்து வைத்தனர்.

அதிபருக்கான காரியாலயம் 5.5 மில்லியன் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டதாக பாடசாலையின் அதிபர் ஆர்.செந்தில்நாதன் தெரிவித்தார்.

நிகழ்வில் உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன்,

சர்வ கட்சி அரசாங்கம் அமைக்கப்பட்டால் அது தமிழர் தரப்புக்கான தீர்வை நோக்கிய பயணத்தின் ஆரம்பமாக இருக்கவேண்டும். குறித்த அரசாங்கத்தில் அனைத்துக் கட்சிகளும் அங்கம் வகிக்கின்றவேளையில் தமிழர்களின் பிரச்னை தொடர்பில் பேசப்பட்டு அதற்கான தீர்வுகள் எடுக்கப்படவேண்டும்.

அத்துடன் கோட்டா கோ கம போராட்டத்தின் ஈடுபட்ட இளைஞர்கள் தற்போது அரசாங்கத்தினால் கைது செய்யப்படுகின்ற நடவடிக்கையை ஏற்றுக் கொள்ள முடியாது. தமிழர்கள் இந்த போராட்டத்தில் ஈடுபடாமல் இருக்கவேண்டும் என்பதை நான் ஏற்கனவே தெரிவித்திருந்தேன்.

சிங்களத் தரப்புக்களிடமிருந்து நாம் ஏமாறியதைக் காட்டிலும் தமிழ் தரப்பினரிடமிருந்து ஏமாந்தமையே அதிகமாக உள்ளது-என்றார். (அ)

## கொரோனா...

தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி இதுவரை பதிவான கோவிட் இறப்புக்களின் மொத்த எண்ணிக்கை 16,559 ஆக அதிகரித்துள்ளது.

## கோட்டாபயவுக்கு

வர கோட்டாபய ராஜபக்ஷவுக்கு முழு உரிமை உண்டு என்றும் அவர் இலங்கை பிரஜை என்றும் சாகர குறிப்பிட்டார்.

முன்னாள் ஜனாதிபதி என்ற வகையில் அவருக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் பாதுகாப் பையும் ஏற்படுத்தி கொடுப்பது அர சாங்கத்தின் பொறுப்பு என்றும் அவர் கூறினார்.

இதேவேளை, பொதுஜன பெரமுனவின் தலைவராக மகிந்த தொடர்ந்தும் செயற்படுவார் என்றும் சாகர காரியவசம் குறிப்பிட்டார். (அ)

## ரட்டா...

உத்தரவை மீறி மே 21ஆம் திகதி போராட்டத்தில் ஈடுபட்டமைக்காக ரட்டா கொழும்பு மத்திய குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றப் பின்னர் காலி முகத்திடல் போராட்டக்காரர்கள் பலர் தொடர்ந்து கைது செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மீனவர்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஓக. 02

மறு அறிவித்தல் வரை மீன்பிடி மற்றும் கடற்தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

புத்தளத்திலிருந்து கொழும்பு, காலி மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகளில் மீன்பிடியில் ஈடுபடுபவர்களுக்கு இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த கடற்பரப்புகளில் மணிக்கு 60, 70 கிலோ மீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசுவதுடன், கடல் அலைகளும் எழக் கூடும் என திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.(அ)

ஈழநாடு
Eelanadu ஈழநாடு

# யாழ். மாவட்டத்துக்கு நேற்று முதல் எரிபொருள் விநியோகம் அதிகரிப்பு



*யாழ்ப்பாணம், ஓக. 02*

யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு நேற்று தொடக்கம் எரிபொருள் விநியோகம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தகவல்களுக்கு அமைவாக இதுவரை தினமும் வழங்கப்பட்டு வந்த எரிபொருள் நிரப்பு நிலையங்களை விட மேலதிக மாக 5 எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு பெற்றோல் வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், நல்லூர், சாவகச்சேரி, வடமராட்சி, சங்கானை பிரதேச செயலர் பிரிவுகளில் மேலதிக எரிபொருள் நிரப்பு நிலையங்கள் அடையாளம் காணப்பட்டு அவற்றுக்கு 6 ஆயிரத்து 600 லீற்றர் பெற்றோல் தினமும் மேலதிகமாக விநியோகிக்கப்படவுள்ளது.

(அ)

# வெளிநாட்டு தபால் கட்டணம் அதிகரிப்பு!

*கொழும்பு, ஓக. 02*

வெளிநாட்டு தபால் கட்டணங்கள் இன்று முதல் அதிகரிக்கப்பட்டுள்ளன.

எரிபொருள் கட்டணம் அதிகரிப்பு, டொலரின் பெறுமதி, விமான கட்டணங்கள், புகையிரத கட்டணங்கள் அதிகரிப்பு காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தற்போதுள்ள கட்டணத்தை விட இருமடங்காகக் கட்டணங்கள் திருத்தப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அதன்படி, வெளிநாட்டு விமான தபால் கட்டணங்கள் மற்றும் வெளிநாட்டு கடல் தபால் கட்டணங்கள் இரண்டும் அதிகரிக்கும் என தெரிவிக்கப்படுகின்றது.

(அ)

## மரண அறிவித்தல்

**தோற்றம்** 14 - 04 - 1945



**மறைவு** 30 - 07 - 2022

# திருமதி வேதநாயகி விநாயகமூர்த்தி

யாழ். இணுவிலைப் பிறப்பிடமாகவும், அளவெட்டியை வசிப்பிடமாகவும், பிரான்ஸை தற்போதய வசிப்பிடமாகவும் கொண்ட வேதநாயகி விநாயகமூர்த்தி அவர்கள் 30.07.2022 சனிக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான இரத்தினம் பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி பரிமளம் தம்பதிகளின் அன்பு மருமகளும், விநாயகமூர்த்தி அவர்களின் அன்பு மனைவியும்,காலஞ்சென்ற கமலாம்பிகை, கோவிந்தசாமி, செல்லம்மா, சின்னராசா, ஜெகதாம்பாள், சத்தியபாமா, சாரதாம்பாள், சந்தானகிருஸ்ணன் ஆகியோரின் அன்புச் சகோதரியும்,காலஞ்சென்ற கேமவதி (லண்டன்), விஸ்வேஸ்வரன்(பாபு- நெதர்லாந்து), கௌரி(சூட்டி- லண்டன்), யசோதை (பிரான்ஸ்), சாருமதி(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும்,ரவிராஜ், பாலகுலேந்திரன், செந்தில்செல்வம், ஜீவராஜ், சுபாங்கி ஆகியோரின் அன்பு மாமியும்,தமிழரசி, தமிழினி, நிவேதன், சுவேதன், யாதவன், அபிநயா, அபினாஸ், ப்ரத்யங்கிரா, ப்ரஸாதினி, ப்ரஹாசினி, ப்ரவீன்ராஜா ஆகியோரின் அன்பு பேத்தியும் ஆவார்.

பார்வைக்கு
Sunday, 31 Jul 2022 2:30 PM - 6:30 PM
Monday, 01 Aug 2022 9:00 AM - 10:30 PM
Tuesday, 02 Aug 2022 9:30 AM - 10:30 PM
Graniterie Marbrerie Jouandou 209 Av. du Général Leclerc, 87100 Limoges, France

கிரியை
Wednesday, 03 Aug 2022 9:30 AM - 12:30 PM
Graniterie Marbrerie Jouandou 209 Av. du Général Leclerc> 87100 Limoges> France

தகனம்
Wednesday, 03 Aug 2022 3:00 PM - 3:30 PM
Crematorium 21 rue MarieCuriem, 87500 Saint-Yrieix-la-perche, France

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**வி. விஸ்வேஸ்வரன் - மகன்** .

தொடர்புகளுக்கு:
**க.விநாயகமூர்த்தி - கணவர்** Mobile : +33751598482
**வி. விஸ்வேஸ்வரன் - மகன்** Mobile : +31645247902
**பா.கௌரி - மகள்** Mobile : +447983526859
**செ.யசோதை - மகள்** Mobile : +33659300634
**ஜீ.சாருமதி - மகள்** Mobile : +33651113047


# நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த திருவிழாவையொட்டி ஓம் ரிவி நடாத்தும்

## சைவம் தழைத்தோங்க....

### சமய அறிவுப் போட்டி

நல்லூர் உற்சவகாலத்தை ஒட்டி டான் குழுமத்தின் ஓம் தொலைக்காட்சியால் சைவம் தழைத்தோங்க.... என்ற தொனிப்பொருளிலான நிகழ்வுகள் இவ்வாண்டும் முன்னெடுக்கப்படவுள்ளன. பாடசாலை மாணவர்களின் சைவசமய அறிவை மேம்படுத்தும் நோக்குடன் இவ்வாண்டு 'சைவக்களஞ்சியம்' என்ற தலைப்பிலான – சமய அறிவுப் போட்டி முன்னெடுக்கப்படவுள்ளது.



**செந்தமிழ் சொல்லருவி ச. லலீசன் நடாத்தும் சமய அறிவுப்போட்டி ஆலய வடகிழக்கு வீதியில் அமைந்திருக்கும் நடராஜா பரமேஸ்வரி மண்டபத்தில் தினமும் மாலை 7.00 மணிக்கு ஆரம்பமாகும்.**



## போட்டி தொடர்பான விதி முறைகள்

பாடசாலை மாணவர் மாத்திரமே போட்டியில் பங்கேற்கலாம்.

கேள்விகள் சைவசமய அறிவு சார்ந்த விடயங்களாகவும் பொதுவான அறிகை சார்ந்ததாகவும் இருக்கும்

வினாக்கள் பெரும்பாலும் தரம் 06 – தரம் 11 சைவநெறி பாடநூலை மையப்படுத்தியதாக அமையும்.


விடை வழங்குவதற்கு 10 செக்கன்கள் அவகாசம் வழங்கப்படும்.

நடுவரின் தீர்ப்பே இறுதியானது

போட்டிகளில் பங்கு கொள்ளவிரும்பும் மாணவர்கள் நிகழ்ச்சி நடைபெறும் மண்டபத்திற்கு நேரடியாக வந்து கலந்துகொள்ளலாம்.

**மேலதிக விபரங்களுக்கு: 075 3132 804**


## மரண அறிவித்தல்



# தேவேந்திரன் மார்க்கண்டு

**தோற்றம்** 27 - 02 -1953

**மறைவு** 29 - 07 -2022

யாழ். அச்செழுவைப் பிறப்பிடமாகவும், கனடா Toronto வை வதிவிடமாகவும் கொண்ட தெய்வேந்திரன் மார்க்கண்டு அவர்கள் 29.07.2022 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார், மார்க்கண்டு மகேஸ்வரி தம்பதிகளின் அன்புப் புதல்வரும், செல்வரத் தினம் அழகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும்,ஜீவலக்சுமி(லதா) அவர்களின் அன்பு மனைவியும்,சுதாகரன், பிரியா, ஜசிந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும்,சுகந்தி, அரவிந்தன், ஆன் ஆகியோரின் அன்பு மாமனாரும்,மகேந்திரன், யோகராணி, புலேந் திரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும்,செல்வராணி, திருச்செல்வம், ஜெயராணி ஆகியோரின் அன்பு மைத்துனரும்,பாமா, சீதா ஆகியோரின் அன்பு மைத்துனரும், பாலசுப்பிரமணியம், பத்மநாதன் ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரரும்,சபினா, சஞ்சு, சுவிர், சயன், ஜெலன், லைனா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

பார்வைக்கு
Monday, 01 Aug 2022 5:00 PM - 9:00 PM, Tuesday, 02 Aug 2022 8:30 AM - 9:30 AM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1. Canada

கிரியை
Tuesday, 02 Aug 2022 9:30 AM - 11:45 AM,Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**பாலேந்திரன் - சகோதரன்** .

தொடர்புகளுக்கு:
**ஜீவலக்சுமி(லதா) - மனைவி** Mobile : +19052012958
**சுதாகரன் - மகன்** Mobile : +12892216804
**சுதா - பெறாமகள்** Mobile : +94776285973
**பிரியா - மகள்** Mobile : +16474542958
**அரவிந்தன் - மருமகன்** Mobile : +16472191516
**பாலேந்திரன் - சகோதரன்** Mobile : +16478637795

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 02.08.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**DAN தமிழ் ஒளி**

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



06.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
07.05 மணி : உளவியல் கருத்து-உளவள துணையாளர் யாழ் பாவாணன்



7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : சொற்சமர்-மறுஒளிபரப்பு
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை

**பகல்**

1.00 மணி : மழலைகள் நேரம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-ரா வண்,எதிர் நீச்சல்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : சினிமா சினிமா
6.30 மணி : மூவி டோக்கீஸ்-வேற்று மொழி திரைப்படங்களின் விமர்சனம்

**இரவு**

7.00 மணி : கதை நேரம்-நகைச்சுவை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சங்கப்பலகை-இலக்கிய நிகழ்ச்சி
10.00 மணி : BLACK AND WHITE

**DAN COMEDY HD**

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**DAN MUSIC HD**

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**கல்வி tv CHANNEL-1**

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**சிவ டிவி**

**காலை**

5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

**CHANNEL HOLY MARY**

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

**Pirai Television**

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு